

# பயப்படாதே!

# “நான் உன்னோடு கூட இருக்கிறேன்”

மோகன் சி. லாசரஸ்

# பயப்படாதே, நான் உன்னோடு கூட இருக்கிறேன்!




மோகன் சி. லாசரஸ்

முதற்பதிப்பு : 2000 ஆகஸ்டு
பிரதிகள் : 2,000

2ம் பதிப்பு : 2003 ஆகஸ்டு
பிரதிகள் : 5,000

3ம் பதிப்பு : 2010 மே
பிரதிகள் : 2,000



வெளியீடு:
**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி – 628 211, தூத்துக்குடி மாவட்டம்.
**Ph: 04639-235 305, 235 705, Fax: 04639-235 415.**
**Email: info@jesusredeems.com**
**Visit us at: http://www.jesusredeems.com/**

## உங்கள் சகோதரனிடமிருந்து...



கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில், உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்கள்!

**“பயப்படாதே, நான் உன்னோடு கூட இருக்கிறேன்!”** என்ற இந்தப் புத்தகத்தை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்! இப்புத்தகத்திலுள்ள செய்திகளனைத்தும் என் தனிப்பட்ட வாழ்க்கையில், என் ஊழியப் பாதையில் தேவனுடைய தெளிவான வழி நடத்துதல்களைப் பெற்றுக் கொள்ள மிக உதவியாக இருந்தது. “**இயேசு விடுவிக்கிறார்**” பத்திரிக்கையில் இந்தச் செய்திகளைச் தொடர்ச்சியாக எழுத, தேவன் எனக்குக் கிருபை செய்தார்.

இந்தச் செய்திகளனைத்தும், உங்கள் வாழ்க்கைக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு இதனைப் புத்தக வடிவில் வெளியிட ஆவியானவர் என்னை ஏவினபடியால், மிகுந்த ஜெபத்துடன் இப்புத்தகத்தை வெளியிடுகிறேன்.

இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு செய்திகள் மூலமாகவும், தேவனாகிய கர்த்தர் உங்களோடு பேசி, உங்களை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன்.

தேவன் தாமே, உங்களோடிருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.

| வ.எண் | பொருளடக்கம்! |
|---|---|


1. நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!

2. பயப்படாதீர்கள், கர்த்தர் உங்களோடிருப்பார்!

3. பயப்படாதீர்கள், உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்!

4. பயப்படாதே, நான் உயிரோடிருக்கிறேன்!

5. பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை!

6. பயப்படாதே, நான் தகப்பனாயிருக்கிறேன்!

7. பயப்படாதீர்கள், இயேசு உங்களை சுகமாக்கப் போகிறார்!

8. பயப்படாதீர்கள், கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்!

9. பயப்படாதீர்கள், உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்!




# நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;" ஏசாயா 41:10.**

இந்த வாக்குத்தத்தம் உங்களுக்குத்தான். உங்களைப் பார்த்துத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார்;

**"மகனே, நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!**

**மகளே, நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!"**

இதை வாசிக்கிற உங்களைப் பார்த்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேரடியாகச் சொல்கிறார்; **"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!"**

**விசுவாசியுங்கள்.** இந்த வாக்குத்தத்தம் உங்களுக்குத்தான் என்று **விசுவாசியுங்கள்.** நீங்கள் விசுவாசிக்கும்போது, உங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியும், தைரியமும் உண்டாகும்!

**"பயப்படாதே"** என்று ஆண்டவர் சொல்லக் காரணம் என்ன? உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில், உங்கள் குடும்ப வாழ்க்கையில், உங்கள் சமுதாய வாழ்க்கையில் பயத்தைக் கொண்டு வரும் காரியங்கள் வரலாம்!

என்றாலும் **பயப்படாதீர்கள், கர்த்தர் உங்களோடுகூட இருக்கிறார்.** உங்களுக்குப் பயத்தைக் கொண்டு வரும் காரியத்தில் ஜெயம் கொடுப்பதற்காகவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களோடிருக்கிறார்.

ஒரு நாளின் 24 மணி நேரமும், அவர் உங்களோடிருக்கிறார். ஒரு வாரத்தின் 7 நாட்களும் இயேசு கிறிஸ்து உங்களோடிருக்கிறார். ஒரு வருடத்தின் 365 நாட்களும் இயேசு கிறிஸ்து உங்களோடிருக்கிறார்.

ஆகவே, **பயப்படாதீர்கள்.**

ஒரு இரவு நேரம், மலைப் பாதையில் ஒரு பஸ் போய் கொண்டிருந்தது. அது, அந்த மலையிலுள்ள ஊருக்கு கடைசி பஸ். இரவு வெகு நேரமானபடியினால், பஸ்ஸில் கொஞ்ச ஆட்கள்தான் இருந்தார்கள்.

குறுகலான பாதையில், பஸ் வளைந்து, நெளிந்து சென்று கொண்டிருந்தது. கொஞ்சம் தவறினாலும், பயங்கரமான பள்ளத்தில் பஸ் உருண்டு விழுந்து விடும்.

'பத்திரமாக ஊர் போய் சேர வேண்டுமே!' என்று அதில் பிரயாணம் செய்தவர்கள், பயத்தோடு அமர்ந்திருந்தார்கள்.

பின் இருக்கையில், ஒரு சிறு பெண் எந்த ஒரு பயமுமில்லாமல் சந்தோஷமாகப் பாடல் பாடிக் கொண்டிருந்தாள்.

அதைக் கவனித்த ஒரு பெரியவர், ஆச்சரியத்தோடு அந்த சிறுமியைப் பார்த்து; "பாப்பா, உனக்குப் பயமில்லையா?" என்று கேட்டார். உடனே அவள், "எனக்குப் பயமேயில்லை. காரணம், இந்த பஸ்ஸை ஓட்டுகிறவரே என் அப்பாதான்!

அவர் பத்திரமாக என்னைக் கொண்டு போய் சேர்ப்பார் என்று எனக்குத் தெரியும். பின் ஏன் நான் பயப்பட வேண்டும்?" என்றாள் மகிழ்ச்சியோடு.

இதுதான், பிள்ளை தகப்பன் மீது வைக்கிற விசுவாசம்! இப்படித்தான் நாமும் நம் பரம தகப்பனாகிய ஆண்டவர் மீது விசுவாசம் வைக்க வேண்டும்.

"**என் மீட்பர் இயேசு கிறிஸ்து என்னோடுகூட இருக்கிறார். ஆகவே, நான் பயப்பட மாட்டேன்**" என்று தைரியமாகச் சொல்லுங்கள்.

"**என் வாழ்க்கையில் என்ன நடந்தாலும், நான் கடந்து செல்கிற பாதை எப்படிப்பட்டதானாலும் நான் பயப்பட மாட்டேன்**" என்று சொல்லுங்கள்.

"**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்**" என்று வாக்குக் கொடுக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, வாக்கு மாறாதவர். அவர் வாக்குக் கொடுத்தபடியே, ஒவ்வொரு நாளும் உங்களோடிருப்பார்.

அவர் எதற்காக உங்களோடிருக்கிறார்? என்பதை அறிந்து கொண்டால், தினமும் நீங்கள் அற்புதங்களைக் காணலாம்.

# இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்!

**"...உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." எரேமியா 1:19.**

இயேசு கிறிஸ்து இரட்சிக்கிறவர். பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை நமக்கு அருள்வதற்காக இரட்சகராக இந்த உலகத்தில் வந்தார்.

என்னுடைய 14வது வயதில், நான் வியாதிப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்தபோது, இயேசு கிறிஸ்து என்னைத் தேடி வந்து என்னைச் சுகமாக்கினார். என் மரணப் படுக்கையை மாற்றினார். 'இயேசு கிறிஸ்து என் மீது எவ்வளவு அன்பு வைத்து, என்னைக் குணமாக்கினார்!' என்று மகிழ்ச்சியடைந்தேன்.

ஆனால், அவர் என்னைச் சுகமாக்கினது, என்னைப் பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காகத்தான் என்பதை மூன்று வருடங்கள் கழித்துத்தான் அறிந்து கொண்டேன். என் பாவங்களை அவர் எனக்கு உணர்த்தியபோது, கண்ணீரோடு நான் மனந்திரும்பினேன். என் பாவங்களை இயேசு கிறிஸ்துவினிடத்தில் அறிக்கையிட்டேன். பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை அவர் எனக்குத் தந்தார். பாவத்திலிருந்து விடுதலை கொடுத்து, புதிய வாழ்க்கையை எனக்குத் தந்தார்.

நீங்கள் இது வரையிலும் பாவ மன்னிப்பை, அல்லது இரட்சிப்பைப் பெறாமல் இருந்தால், இன்றைக்கு இயேசு கிறிஸ்து உங்களை இரட்சிக்க விரும்புகிறார். இதுவரை உங்கள் வாழ்க்கையில் காணப்படும் பாவக் காரியங்கள், பாவப் பழக்கங்கள், பாவ சுபாவங்கள் எதுவானாலும் அதிலிருந்து உங்களுக்கு விடுதலை கொடுக்க ஆண்டவர் விரும்புகிறார். **நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்** என்பதே, உங்களைக் குறித்து ஆண்டவருடைய நோக்கமாயிருக்கிறது.

அதற்கு நீங்கள்தான் தீர்மானம் எடுக்க வேண்டும். "இனிமேல் இந்தப் பாவக் காரியம், பாவப் பழக்கம்

வேண்டாம். இந்த நாளிலிருந்து புதிய வாழ்க்கை வாழ வேண்டும்” என்று நீங்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால், இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெறுவீர்கள்.

நீங்கள் இரட்சிக்கப்படும்போது, உங்கள் முழுக் குடும்பமும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்குள் வருகிறது என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். இயேசு கிறிஸ்து உங்களோடுகூட இருந்து, உங்கள் முழுக் குடும்பத்தையும் இரட்சிப்பார்.

**... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்... (அப். 16:31)** என்பது, ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தத்தை **விசுவாசியுங்கள்**. உங்கள் முழுக் குடும்பமும் இரட்சிக்கப்படும் என்று **விசுவாசியுங்கள்**.

விசுவாசத்தோடு இந்த வாக்குத்தத்தத்தை வைத்து ஜெபிப்பீர்களானால், உங்கள் குடும்பத்திலுள்ள எல்லோரும் இரட்சிப்பின் மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்வார்கள்.

எனக்கு ஒரு குடும்பத்தைத் தெரியும். தாயும், தகப்பனும் இரட்சிக்கப்பட்டவர்கள். மூத்த மகனோ, ஆண்டவரைக் குறித்த பயமில்லாதபடி, முரட்டாட்டமுள்ளவனாய் காணப்பட்டான். வாலிப வயதில் வைராக்கியமுள்ளவனும், பழி வாங்குகிற கொடூர குணமுள்ளவனுமாய் இருந்தான். படிக்கிற இடத்திலும் பிரச்சனையையும், குழப்பத்தையும் உண்டாக்கி விடுவான். பெற்றோருடைய ஆலோசனைகளைக் கேட்பதேயில்லை.

ஆலயத்திற்கோ, குடும்ப ஜெபத்திற்கோ வர மாட்டான். ஒருவருக்கும் அடங்காதவனாயிருந்த தன் மகனை, ‘ஆண்டவர் இரட்சிக்க வேண்டுமே!’ என்று தாயும், தகப்பனும் ஜெபித்து வந்தார்கள். அதிகாலையில் அவனுடைய தாயார், அவன் அருகில் முழங்கால்படியிட்டு ஜெபிப்பார்கள்.

அழுகையின் சத்தம் கேட்டு அவன் விழித்து விட்டால், அவ்வளவுதான். “ஏன் எனக்காக இப்படி ஒப்பாரி வைக்கிறீர்கள்?” என்று தன் தாயாரைத் திட்டுவான்.

ஒருநாள் காலை வேளையில், அவன் பரிசுத்த வேதாகமத்தை எடுத்து வாசிப்பதைப் பார்த்த அவனுடைய தகப்பனார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆனால், திடீரென்று

**அவன் வேதப் புத்தகத்தை இரண்டாகக் கிழித்துத் தூக்கி எறிந்தான். தகப்பனாரின் உள்ளம் மிகுந்த வேதனையடைந்தது. 'தகப்பனார் என்னைக் கண்டிப்பார், இன்று அவரை அடித்து விட வேண்டும்' என்கிற ஒரு வைராக்கியத்தோடு அவன் உட்கார்ந்திருந்தான்.**

**அந்தத் தகப்பனோ, மகனிடத்தில் எதுவும் பேசவில்லை. கிழிந்து கிடந்த பரிசுத்த வேதாகமத்தை தன் கையில் எடுத்து, அந்த இடத்திலேயே முழங்கால்படியிட்டு, "ஆண்டவரே, என் மகனை மன்னியும்" என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.**

**அந்த சத்தத்தைக் கேட்டு அவனுடைய தாயார் அங்கு வந்தார்கள். காரியத்தை விளங்கிக் கொண்டார்கள். அவர்களும் தன் கணவருக்கு அருகில் முழங்கால்படியிட்டு, "ஆண்டவரே, என் மகனை மன்னியும்" என்று சொல்லி அழுது ஜெபித்தார்கள்.**

**அதை எதிர்பாராத அந்த வாலிபனுடைய உள்ளத்தில் ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பித்தார். தான் ஒரு பெரிய பாவி என்பதை உணர ஆரம்பித்தான். தன் அறைக்குள் சென்று, கதவை மூடி முழங்கால்படியிட்டான்.**

**வாழ்க்கையில் முதன்முதலாகத் தன் பாவங்களுக்காக மனங்கசந்து அழுதான். பலமணி நேரங்கள் கண்ணீரோடு ஜெபித்து மனந்திரும்பினான். தன் தாய், தகப்பனிடத்திலும் வந்து மன்னிப்புக் கேட்டு, ஒப்புரவானான். அவனுடைய வாழ்க்கை மாறினது.**

**வேதாகமக் கல்லூரியில் நாங்கள் இருவரும் ஒன்றாகப் படிக்கக் கர்த்தர் வாய்ப்புக் கொடுத்தார். இன்று அநேகருக்கு ஆசீர்வாதமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்.**

தாயும், தகப்பனும் இரட்சிக்கப்பட்டு, ஜெபித்தபடியினால் பிள்ளைகளும் இரட்சிக்கப்பட்டார்கள். உங்கள் வீட்டிலும் இன்னும் இரட்சிக்கப்படாதவர்கள் இருந்தால், அவர்களும் கட்டாயம் இரட்சிக்கப்படுவார்கள். இதை **விசுவாசியுங்கள்.**

உங்கள் கணவர், உங்கள் மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள் இரட்சிக்கப்படாதிருந்தால், ஆண்டவர் அவர்களை இரட்சிக்கப் போகிறார். **பயப்படாதீர்கள்!** விசுவாசத்தோடு அவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள். இரட்சிக்கும்படியாகக் கர்த்தர் உங்களோடு இருக்கிறார்.

# தப்புவிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்!

**"உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." எரேமியா 15:20.**

பொல்லாத ஜனங்களுக்கு நடுவில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பொறாமை கொண்ட மக்கள்தான் நம்மைச் சூழ்ந்திருக்கிறார்கள்.

வசிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், நம்முடைய உயர்வை சகித்துக் கொள்ள முடியாத, நமக்குத் தீங்கு செய்ய நினைக்கிற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

என்றாலும், எந்தத் தீங்குக்கும் நம்மைத் தப்புவிக்கிற தேவன் நமக்கு இருக்கிறார். ஆகவே, **பயப்படாதீர்கள். 'தானியேல்'** என்ற பக்தன், பாபிலோன் (இன்றைய ஈராக்) தேசத்தில் உயர்ந்த ஒரு பதவியில் இருந்தார். அவர் கர்த்தருக்குப் பயந்து, உண்மையோடும், நேர்மையோடும் நடந்தபடியினால், அந்த தேசத்தின் ராஜா அவருக்கு உயர்ந்த பதவியைக் கொடுத்தான்.

உடனே, தானியேலைச் சூழ்ந்திருந்தவர்கள், பொறாமை கொண்டார்கள். "இவன் வேறு தேசத்திலிருந்து அடிமையாக வந்தவன். நமக்கும் மேலாக உயர்ந்திருக்கிறானே! இவனை எப்படியாவது அழித்து விட வேண்டும்" என்று திட்டமிட்டார்கள். தானியேலுக்கு விரோதமாகத் தந்திரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அவரைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்.

**"ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான்." தானி. 6:16.**

"தானியேலை சிங்கங்கள் கொன்று போடும்" என்றுதான், தானியேலினுடைய விரோதிகள் எண்ணினார்கள். ஆனால், கர்த்தர் தானியேலோடு இருந்தபடியினால், தன் தூதர்களை அனுப்பி, சிங்கங்களின் வாயைக் கட்டினார். சிங்கங்களின் கெபியிலிருந்து தானியேலைத் தப்புவித்தார் **(தானியேல் 6:16-28).**

தானியேலைத் தப்புவித்த தேவன், உங்களையும் தப்புவிப்பார். பொறாமை கொண்ட பொல்லாத மனிதர்களால் வரும் நெருக்கமானாலும், கெர்ச்சிக்கிற சிங்கம்போல எழும்புகிற பிசாசின் போராட்டமானாலும், **பயப்படாதீர்கள்.** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, எல்லா இக்கட்டிலுமிருந்து உங்களைத் தப்புவிப்பார்.

ஒரு தேவனுடையப் பிள்ளை, தாங்கள் கட்டிய ஒரு வீட்டை ஒரு மனிதனுக்கு வாடகைக்குக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் வேலை காரியமாக, பல ஊர்களுக்கு மாற்றலாகிச் சென்று கொண்டிருந்தார்கள்.

வேலையிலிருந்து ஒய்வு பெற்ற சமயத்தில், சொந்த வீட்டில் வந்து தங்கத் தீர்மானித்தார்கள். வாடகைக்கு இருந்த மனிதனோ, பொல்லாதவனாயிருந்தான். "வீட்டைத் திரும்பக் கொடுக்க முடியாது" என்று போராடினான்.

அந்த தேவ மனிதன், அன்பாய் அவனிடத்தில் பேசிப் பார்த்தார். மற்ற ஆட்களை வைத்துச் சொல்லிப் பார்த்தார். அவன் யார் சொல்லுக்கும் அடங்காதவனாயிருந்தான். அந்த தேவப் பிள்ளைகளுக்கோ மிகுந்த வேதனை.

தாங்கள் கஷ்டப்பட்டுக் கட்டின சொந்த வீட்டிற்குள் தாங்களே செல்ல முடியாத நிலைமை! 'நீதிமன்றத்திற்குப் போனால், வழக்கு முடிய எத்தனையோ வருடங்கள் ஆகும்' என்று நினைத்து, கர்த்தரிடத்தில் அந்தக் காரியத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

அந்தப் பொல்லாத மனிதன், வீட்டுச் சொந்தக்காரர்களை ஊரை விட்டு விரட்டவும், வீட்டைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும், பில்லிசூனியம் செய்வதற்காக ஒரு மந்திரவாதியினிடத்தில் சென்றான். பணத்திற்காக மந்திரம் செய்யக் கூடிய அந்த மந்திரவாதியும், பணத்தை வாங்கிக் கொண்டு, பலிகளைச் செலுத்தி, மந்திரம் செய்ய ஆரம்பித்தான்.

மந்திரம் செய்யும்போது, பொல்லாத ஆவிகள் அவனிடத்தில் வரும். அந்த ஆவிகளைக் கொண்டுதான் மனிதர்களை வேதனைப்படுத்துவான். ஆனால், அந்த தேவப் பிள்ளைகளுக்கு விரோதமாக அவன் மந்திரம் செய்து கொண்டிருக்கும்போது, பிரகாசமான ஒளியின் மத்தியில் இயேசு கிறிஸ்து அவனுக்கு முன்பாக வந்து நின்றார்.

அவனுடைய உள்ளம் நடுங்க ஆரம்பித்தது. இயேசு கிறிஸ்து அவனை நோக்கி : "என்னுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக நீ மந்திரம் செய்யத் துணிகிறது என்ன? என் பிள்ளைகளின் வீட்டை விட்டு அவனை வெளியேறச் சொல்" என்று சொல்லி விட்டு, மறைந்து போனார்.

அவ்வளவுதான்! மந்திரவாதி நடுக்கத்தோடு அந்த மனிதனை அழைத்து, "அந்த வீட்டில் இருப்பது உங்களுக்கு நல்லதல்ல. உடனே அந்த வீட்டை அவர்களிடத்தில் கொடுத்து விடுங்கள். அல்லது, உங்களுக்குத் தீமை சம்பவிக்கும்" என்று கூறினான். உடனே அந்தப் பொல்லாத மனிதன் அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

இந்தச் சாட்சியை ஒரு புத்தகத்தில் நான் வாசித்தேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பொல்லாத மனிதர்களின் பொறாமைக்கும், பொல்லாத ஆவிகளின் கிரியைகளுக்கும் நம்மைத் தப்புவிக்கிறவர்.

**"நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்..." (எரேமியா 15:21)** என்ற கர்த்தரின் வார்த்தை எத்தனை உண்மையானது பாருங்கள்!

இது மாத்திரமல்ல, எதிர்பாராமல் எத்தனையோ ஆபத்துகள் நம் வாழ்க்கையில் வருகின்றன. எந்த ஆபத்து வந்தாலும், அதிலிருந்து நம்மைத் தப்புவிக்க, ஆண்டவர் அற்புதம் செய்கிறவராயிருக்கிறார்.

வெளிநாடு ஒன்றில், ஒரு ஊழியக்காரர் ஒரு மனிதனைச் சந்தித்தார். அந்த மனிதர், தன் சட்டையில் மீன் உருவத்தை, Badge ஆக அணிந்திருந்தார். அந்த ஊழியக்காரர், "இதை எதற்காக அணிந்திருக்கிறீர்கள்? அழகுக்காகவா? அல்லது, இதில் ஏதாவது விசேஷம் இருக்கிறதா?" என்று அந்த மனிதனிடத்தில் விசாரித்தார்.

அப்பொழுது அந்த மனிதர், தான் ஒரு கப்பல் மாலுமியாகப் பணி செய்வதாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினார்.

ஒரு சமயம், அவர் வேலை செய்த கப்பல் நடுக் கடலில் சென்று கொண்டிருந்தபோது, கப்பலின் அடித் தளத்தில் துவாரம் விழுந்து, கப்பலுக்குள் தண்ணீர் வர ஆரம்பித்தது. வேகமாக தண்ணீரை அப்புறப் படுத்தி, துவாரத்தை அடைக்க முயற்சித்தார்கள். ஆனால், முடியவில்லை. தண்ணீரின் வருகை வர வர அதிகரித்தது. துவாரத்தை அடைக்க முடியாதபடி இக்கட்டான ஒரு சூழ்நிலை வந்தது. சில மணி நேரத்தில் கப்பல் கடலுக்குள் அமிழ்ந்து விடும் சூழ்நிலை!

உதவிக்கு யாரையாவது அழைப்பதற்கும், கண்ணுக்கெட்டிய தூரம்வரை வேறு கப்பல்களும் வந்த மாதிரித் தெரியவில்லை. அந்த ஆபத்தான நேரத்தில், ‘என்ன செய்வது?’ என்று எல்லோரும் பயந்தார்கள். கப்பல் மாலுமியோ, இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ள ஒரு மனிதர். கப்பலிலிருந்த யாவரையும் கூடி வரச் செய்தார்.

“நாம் தப்பித்துக் கொள்ள ஒரு வழியும் இல்லை. ஆனால், இந்த ஆபத்திலிருந்து நம்மைத் தப்புவிக்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் மட்டுமே முடியும். நாம் அவரிடத்தில் வேண்டுதல் செய்யலாம்” என்று கூறி, ஜெபிக்க ஆரம்பித்தார்.

சில நிமிடங்கள் ஜெபித்து முடித்தார்கள். அந்த ஜெபத்திற்குப் பிறகு, கப்பலுக்குள் தண்ணீர் வருவது நின்று போனது. “என்ன ஆயிற்று? எப்படி அந்தத் துவாரம் அடைபட்டது?” என்று மிகவும் ஆச்சரியப் பட்டார்கள். அந்த இடத்தில் தண்ணீர் இருந்தபடியினால், ‘எப்படித் தண்ணீர் வருவது நின்று போனது?’ என்பதைப் பார்க்க முடியவில்லை. “எப்படியோ, ஆண்டவர் நம்மைத் தப்புவித்தார்” என்று சொல்லி, இயேசு கிறிஸ்துவைத் துதித்தார்கள்.

கப்பல் கரை சேர்ந்ததும், தண்ணீரை அப்புறப்படுத்திப் பார்த்தார்கள். ஒரு மீன் அந்தத் துவாரத்திற்குள் நுழைந்து, அடைத்திருந்ததைக் கண்டார்கள். பாருங்கள், ஆண்டவர், ஆபத்திலிருந்த தம் பிள்ளைகளைத் தப்புவிப்பதற்காக, ஒரு மீனுக்குக் கட்டளையிட்டார். அது வந்து, அந்தத் துவாரத்திற்குள் நுழைந்து, அதை அடைத்தது.

**ஆண்டவரின் அந்த அற்புதச் செயலைக் கண்டு ஆச்சரியப்பட்டு, கர்த்தரைத் துதித்தார்கள்.**

**ஆண்டவரின் அந்த அற்புதச் செயலை நினைவு கூறும்படியாகத்தான், இந்த மீன் Badgeஐ அணிந்திருப்பதாக அந்த மாலுமி கூறினார்.**

நம்முடைய ஆண்டவர், எவ்வளவு அற்புதமானவர் பாருங்கள்! அன்று யோனாவுக்காக ஒரு மீனுக்குக் கட்டளை கொடுத்தவர், எலியாவுக்காக ஒரு காகத்திற்குக் கட்டளை கொடுத்தவர், தானியேலுக்காக சிங்கங்களுக்குக் கட்டளை கொடுத்தவர், **உங்களைத் தப்புவிக்கவும் அற்புதங்களைச் செய்வார்!**

**விசுவாசியுங்கள்.** "எந்தச் சூழ்நிலையிலும், என்னோடிருக்கிற என் இயேசு கிறிஸ்து என்னைத் தப்புவிப்பார்" என்று விசுவாசியுங்கள். உங்களை அமிழ்ந்து போக, அவர் விட மாட்டார்.

கடன் பிரச்சனையிலிருந்து உங்களைத் தப்புவிப்பார்! நஷ்டத்திலிருந்து உங்களைத் தப்புவிப்பார்! வறுமையிலிருந்து உங்களைத் தப்புவிப்பார்!

நீங்கள் பயப்படும் காரியத்திலிருந்து உங்களைத் தப்புவிப்பார்! எந்தப் பிரச்சனையிலிருந்தும் உங்களைத் தப்புவிப்பதற்காகவே ஆண்டவர் உங்களோடிருக்கிறார்.

ஆண்டவர் உங்களைத் தப்புவிக்க, அற்புதம் செய்ய வேண்டுமானால், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் போலக் **கர்த்தரில் உறுதியாக இருங்கள்.**

அவர்களுக்கு ஒரு சோதனை, நெருக்கம் வந்தபோது, கர்த்தரை விட்டு விலகாமல், கர்த்தரில் அவர்கள் உறுதியாயிருந்தார்கள்.

"தேசத்தின் ராஜா நிறுத்தின பொற்சிலையை வணங்க மாட்டோம், கர்த்தரைத் தவிர, வேறு யாரையும் வணங்க மாட்டோம்" என்று, உறுதியாக அவர்கள் இருந்தபடியினால், ராஜா அவர்களை அக்கினிச் சூளையில் போட உத்தரவிட்டான். மரணம் வருகிற அந்த நேரத்திலும், அவர்கள் ராஜாவை நோக்கி:

**"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற**

**அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.**

**விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு** (மனிதர்களுடைய கைகளினால் செய்த சிலைகளுக்கு) **ஆராதனை செய்வதுமில்லை,... பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.'' தானியேல் 3:17,18.**

இப்படி அவர்கள் கர்த்தரில் உறுதியாயிருந்தபடியினால், அவர்கள் அக்கினிச் சூளைக்குள் போடப்பட்டபோது, கர்த்தரே அந்தச் சூளைக்குள் இறங்கி, அவர்களைத் தப்புவித்து, உயிரோடு வெளிவரச் செய்தார்.

நீங்களும் அவர்களைப்போல எந்தச் சூழ்நிலையிலும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் உறுதியாயிருங்கள். அவரை விட்டு விலகாமலும், முன் வைத்த காலைப் பின் வைக்காமலும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளுங்கள். அப்பொழுது, ஆண்டவர் உங்களைத் தப்புவிப்பார்.

## காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்!

**“நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.'' (எரேமியா 1:8)** என்று கர்த்தர் சொல்கிறார்.

கர்த்தர் நம்மை இரட்சித்து, தப்புவிக்கிறவர் மட்டுமல்ல, நம்மைக் காத்துக் கொள்ள, அவர் நம்மோடு இருக்கிறார்.

**‘சாது சுந்தர் செல்வராஜ்’ (Angel TV- Chennai) என்கிற ஒரு அருமையான தேவ மனிதர் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவுக்காகத் தன்னை பூரணமாக அர்ப்பணித்திருக்கும் அவரை, ஆண்டவர் உலகமெல்லாம் கொண்டு சென்று பயன்படுத்தினாலும், ‘திபெத் மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க வேண்டும்’ என்பதுதான் அவருடைய**

தரிசனம். ஆகவே, அதிகமான நாட்கள் திபெத் பகுதியில்தான் சுற்றி நடந்து ஊழியம் செய்வார்கள். ஒரு சமயம், திபெத்தில் உயரமான ஒரு மலைப் பகுதியில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு கொடிய வியாதி அவர்களைத் தாக்கியது.

அந்த வியாதி தாக்கினால், உடனே சில மணி நேரத்திற்குள் மலையை விட்டு இறங்கி, சமபூமிக்கு வந்து விட வேண்டும். அல்லது மரணம்தான்!

போக்குவரத்து வசதியில்லாத அந்த மலையிலிருந்து இறங்க பலமணி நேரங்கள் ஆகும். ஆகவே, தப்பித்துக் கொள்ள வழியில்லை. அந்த வியாதி தாக்கினால், தலைப் பகுதியில் தண்ணீர் போன்ற திரவம் உண்டாகும். தலையை அசைத்தால், தலைக்குள் மூளை அசைவதை உணர முடியுமாம்!.

அப்படி, அவர்களுடைய தலைக்குள்ளும் அசைவு உண்டாயிற்று. 'இனி மரணம்தான்!' என்கிற சூழ்நிலையில், "ஆண்டவரே! இதுவரை உண்மையோடும், உத்தமத்தோடும் ஊழியம் செய்ய எனக்குக் கிருபை கொடுத்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்" என்று ஜெபித்து, மரணத்திற்கு ஆயத்தமானார்கள்.

திடீரென்று, ஒரு தேவ தூதன் அவருக்கு முன்பாகத் தோன்றினான். "நீ பயப்படாதே, இன்னும் நீ எனக்காக நிறைவேற்ற வேண்டிய ஊழியங்கள் உண்டு.

இப்பொழுது நீ மரிப்பதில்லை. நான் உன்னைக் குணமாக்குகிறேன்" என்று, ஆண்டவர் சொல்லி அனுப்பிய வார்த்தைகளை அவரிடத்தில் சொல்லி விட்டு, மறைந்து போனான்.

அவ்வளவுதான்! அந்த நிமிடத்திலிருந்து அவருக்கு அற்புதமான சுகம் உண்டாயிற்று. இன்றுவரை நல்ல சுகத்தோடு, மகிமையாக, தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

பாருங்கள்! ஆண்டவர் எப்படி தன் பிள்ளைகளைப் பாதுகாக்கிறார்! அவர் உங்களையும் பாதுகாப்பார்.
**பயப்படாதீர்கள்!**

**"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.**

**பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.**

**கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.**

**கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்." சங். 121:5-8.**

கர்த்தர் கொடுக்கும் இந்த வாக்கை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

**"தினமும், கர்த்தர் என்னைக் காக்கிறவர். அவர் என் வலது பக்கத்திலே எனக்கு நிழலாயிருக்கிறார். ஒன்றும் என்னை சேதப்படுத்துவதில்லை.**

**கர்த்தர் எல்லாத் தீங்குக்கும் என்னை விலக்கிக் காப்பார். அவர் என் ஆத்துமாவைக் காப்பார்.**

**கர்த்தர் என் போக்கையும் வரத்தையும் காப்பார்"** என்று விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள்.

அவர் உங்களைக் கடைசி வரைக்கும் காப்பார். உங்கள் ஆத்துமாவைக் காப்பார். இதற்காக உங்களோடு இருக்கிறார்.

**"நீ பயப்படாதே, நான் உன்னோடு இருக்கிறேன்!"** என்று உங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்.

**உன்னை இரட்சிக்கும்படிக்கு,**
**உன்னைத் தப்புவிக்கும்படிக்கு,**
**உன்னைக் காத்துக் கொள்ளும்படிக்கு,**
**நான் உன்னோடு இருக்கிறேன்!**

என்று, இயேசு கிறிஸ்து உங்களுக்குச் சொல்கிறார்.

ஆனால், இயேசு கிறிஸ்து உங்களோடு, உங்களுக்குள் இருக்கிறார் என்று சொல்ல முடியுமா? இயேசு கிறிஸ்து உங்களோடு இருக்கிறாரா? என்று, உங்கள் இருதயத்தை சற்று சோதித்துப் பாருங்கள்.

ஒருபக்கம் பாவத்திற்கும், மற்றொரு பக்கம் இயேசு கிறிஸ்துவுக்கும் நீங்கள் இடம் கொடுக்க முடியாது.

பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால்தான், அவர் உங்களோடு இருப்பார்.

இதுவரை நீங்கள் எப்படியிருந்தாலும், இன்றைக்கு ஒரு தீர்மானம் எடுங்கள்.

இயேசு கிறிஸ்துவோடு வாழ, உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து உங்களோடு இருப்பார்.




# 2. பயப்படாதீர்கள், கர்த்தர் உங்களோடிருப்பார்!

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;..." (ஏசாயா 41:10)** என்று வாக்குக் கொடுத்த கர்த்தர், வாக்கு மாறாதவர்! அவர் வாக்குக் கொடுத்தபடியே, உங்களோடுகூட இருக்கிறார். உங்கள் வாழ்நாள் முழுவதும், கர்த்தர் உங்களோடிருப்பார்!

பயப்படக் கூடிய காரியங்கள் வரலாம்! என்றாலும், **பயப்படாதீர்கள்.** கர்த்தர் உங்களோடுகூட இருக்கிறபடியினால், உங்களால் பயத்தை மேற்கொள்ள முடியும்.

உங்கள் பிரச்சனைக்கு நடுவிலும், கர்த்தர் உங்களோடிருப்பார்! உங்கள் தேவைகளுக்கு நடுவிலும், கர்த்தர் உங்களோடிருப்பார்!

அவர், தான் சொன்னபடியே உங்களோடிருக்கிறபடியினால், உங்கள் பிரச்சனைகள் மாறும்! உங்கள் தேவைகள் சந்திக்கப்படும்! உங்கள் போராட்டத்தில் ஜெயம் வரும்! ஆகவே, **பயப்படாதீர்கள்.**

சில சமயங்களில் நம்மைச் சூழ்ந்து வரக்கூடிய பிரச்சனைகள், போராட்டங்களைப் பார்க்கும்போது, "ஆண்டவர் நம்மை விட்டு விலகி விட்டாரோ?" என்று எண்ணத் தோன்றும்! என்றாலும், அவர் நம்மோடுதான் இருக்கிறார்.

ஏனென்றால், அவர் கொடுத்த வாக்குத்தத்தம் பொய்யல்ல! அவர் வாக்குக் கொடுத்தபடியே, நம்மோடு கூட இருக்கிறார்!

இதை **விசுவாசியுங்கள்!** விசுவாசத்தோடு கர்த்தரைத் துதியுங்கள்! அவர் உங்களோடுதான் இருக்கிறார். சந்தேகப்படாதீர்கள்! நீங்கள் அவரோடு இருக்க விரும்புவதைக் காட்டிலும், அவர் உங்களோடிருக்க அதிக விருப்பம் உள்ளவராக இருக்கிறார்.

ஆனால், அவர் நம்மோடிருக்க வேண்டுமானால், நாம் செய்ய வேண்டிய காரியங்கள் சில உண்டு.

## நீங்கள் கர்த்தரோடிருந்தால், கர்த்தரும் உங்களோடிருப்பார்!

**"... நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டு விடுவார்." 2 நாளா. 15:2.**

ஒரு ஊழியக்காரர், ஒரு ஞாயிறு பள்ளியைச் சந்திக்கப் போனார். சிறு பிள்ளைகள் இருக்கிற வகுப்பிற்குச் சென்றார். "இந்தச் சிறு பிள்ளைகளிடத்திலே ஒரு கேள்வியைக் கேட்கட்டுமா?" என்று, அங்கிருந்த ஆசிரியரிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டார். ஒரு சிறு பெண்ணைப் பார்த்து: "இயேசு கிறிஸ்து எங்கு இருக்கிறார்?" என்றார்.

"பொதுவாக சிறு பிள்ளைகள், 'இயேசு கிறிஸ்து ஆலயத்தில் இருக்கிறார். அல்லது, வானத்தில் இருக்கிறார், மோட்சத்தில் இருக்கிறார்' என்பதாகச் சொல்வார்கள். அப்படித்தான் இந்தச் சிறு பெண்ணும் ஏதாவது சொல்வாள்" என்று அவர் எதிர்பார்த்தார்.

ஆனால், அந்தச் சிறு பெண், தன் இருதயத்தின் மீது கை வைத்து, "இயேசு கிறிஸ்து என் இருதயத்தில் இருக்கிறார்" என்று மகிழ்ச்சியோடு கூறினாள். ஊழியக்காரர் ஆச்சரியமடைந்து, "இயேசு கிறிஸ்து உன் இருதயத்தில் இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"வாசம் பண்ண அனுமதித்தேன். நான்தானே என் இருதயக் கதவைத் திறந்து, இயேசு கிறிஸ்துவை என் இருதயத் திற்குள் வாசம் பண்ண அனுமதித்தேன். ஆகவே, எனக்குத் தெரியும்" என்று மகிழ்ச்சியோடு அந்தச் சிறு பெண் கூறினாள்.

பிரியமானவர்களே! அந்தச் சிறு பெண்ணின் அனுபவம் உங்களுக்கு உண்டா? யோசித்துப் பாருங்கள். கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்ததினாலோ, கிறிஸ்தவப் பெயரை வைத்துக் கொள்வதினாலோ, 'இயேசு கிறிஸ்துவை

நம்புகிறேன்' என்று சொல்லிக் கொள்வதினாலோ, இயேசு கிறிஸ்து நம்மோடுகூட இருப்பதில்லை.

பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை நம் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளும்போதுதான், அவர் நம் இருதயத்திற்குள் வந்து தங்குகிறார். இதுவரை இப்படிப்பட்ட அனுபவம் உங்களுக்கு இல்லாவிட்டால், இன்றைக்கு இயேசு கிறிஸ்துவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் உங்களோடிருப்பதை, அவருடைய பிரசன்னத்தினால், உங்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

அவரை ஏற்றுக் கொண்ட, ஒருநாள் அனுபவத்தோடு, எல்லாம் முடிந்து விடுவதில்லை. தினமும் அவர் உங்களோடிருக்க வேண்டுமானால், நீங்களும் தினம் அவரோடிருக்க வேண்டும். **நீங்கள் அவரை விட்டு விட்டால், அவரும் உங்களை விட்டு விடுவார்.**

தினமும் கர்த்தர் உங்களோடிருக்க வேண்டுமானால், தினமும் நீங்கள் சில காரியங்களைச் செய்ய வேண்டும்.

## தினமும் ஜெபிக்க வேண்டும்!

தனித்து, ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து ஜெபிக்கும் போதுதான், நாம் கர்த்தரோடு இருக்க முடியும். அதிகாலையில் எழுந்து, முதலாவது பரம தகப்பனுடைய பாதத்தில் அமர்ந்து, அவரோடு பேசுங்கள்.

**அதிகாலையில், குறைந்தது ஒருமணி நேரமாவது தனித்து ஜெபியுங்கள்.** அந்தநாள் முழுவதும் தேவன் உங்களோடிருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

**எனக்கு ஒரு சகோதரனைத் தெரியும். அவர் ஒரு பொறுப்பான பதவியில், அதிகாரியாகப் பணி செய்து கொண்டிருக்கிறவர்.**

**ஒருநாள் அவரோடு நான் பேசிக் கொண்டிருக்கும்போது, தன்னுடைய ஆவிக்குரிய அனுபவங்களை என்னிடத்தில் இப்படியாகச் சொன்னார்: "அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் ஆண்டவர் என்னை எழுப்புவார். அந்த அதிகாலை நேரத்தில் குறைந்தது ஒருமணி நேரம் ஜெபிப்பேன்" என்றார்.**

**"எதற்காக ஜெபிப்பீர்கள்?" என்று கேட்டபோது, "நம் தேசத்திற்காக ஜெபிப்பேன், ஊழியர்களுக்காக ஜெபிப்பேன், மிஷனெரிகளுக்காக ஜெபிப்பேன். கடைசியாக, என் குடும்பத்திற்காக ஜெபிப்பேன். இப்படி நான் ஜெபிக்கும்போது, வரப் போகிற காரியத்தையெல்லாம் கர்த்தர் எனக்கு வெளிப்படுத்துவார். அது ஒரு இனிமையான நேரம்" என்று கூறினார்.**

இத்தனைக்கும், அவர் காலை ஏழு மணிக்கெல்லாம் தன் அலுவலகத்தில் இருக்க வேண்டும்! உங்கள் வாழ்க்கையை சோதித்துப் பாருங்கள். இதுவரை நீங்கள் எப்படியிருந்தாலும், இன்றைக்கு ஒரு தீர்மானம் பண்ணுங்கள். தினமும், குறைந்தது, ஒருமணி நேரமாவது தனித்து ஜெபிக்கத் தீர்மானியுங்கள். அப்பொழுது, கர்த்தர் உங்களை விட்டு விலகாமல், உங்களோடு இருப்பார்.

## தினமும் வேதத்தை தியானிக்க வேண்டும்!

**"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.**

**... நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்." யோசுவா 1:8,9.**

ஜெபத்தையும், வேதத்தை தியானிப்பதையும் பிரிக்கவே முடியாது. ஜெப நேரத்தில் வேதத்தை தியானிப்பது மிக முக்கியம். இரவும், பகலும் கர்த்தருடைய வேதத்தை தியானிக்கும்போது, கர்த்தரும் உங்களை விட்டு விலகாமல் உங்களோடிருப்பார்.

**வேதத்தை நேசியுங்கள்.** கர்த்தர், தம்முடைய வார்த்தைகளை நம் கரத்தில் கொடுத்திருக்கிறபடியினால், கர்த்தரைத் துதியுங்கள். தினமும் ஜெபத்தோடு வேதத்தை

வாசியுங்கள், தியானியுங்கள். வேத வசனத்தின்படி வாழ, உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களோடிருப்பதை உணர்வீர்கள்.

**'ஜார்ஜ் முல்லர்' என்கிற ஒரு தேவ மனிதர், ஒரு விசுவாச வீரன்! விசுவாச ஜெபத்தினால், கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் சாதித்தவர். ஜெபத்தினால், தேவனிடமிருந்து அற்புதங்களைப் பெற்றவர்.**

**யாருடைய உதவியுமில்லாமல், தேவனையே சார்ந்து ஆயிரக்கணக்கான அனாதைப் பிள்ளைகளைப் பராமரித்தவர். தன்னுடைய விசுவாச ஜெபத்தினால், தேவனிடமிருந்து அவர் பெற்றுக் கொண்ட அற்புதங்கள் ஏராளம்.**

**ஜெபத்தினால் அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் கண்டபோதும், தன் தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலனற்று, வளர்ச்சியில்லாமல் தான் குன்றிப் போனதை உணர்ந்தார். ஆவியானவர் காரணத்தை அவருக்கு உணர்த்தினபோது, தன் தவறை அறிந்து கொண்டார்.**

**அதன் பிறகு, வேதத்தை அதிகமாய் வாசிக்க ஆரம்பித்தார். ஜெபத்திற்கு முன்பாக வேதத்தை தியானித்து, அந்த வேத வசனங்களை வைத்தே ஜெபிக்க ஆரம்பித்தார். அதன் பிறகு, தன் சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையில் புது பெலனைப் பெற்றுக் கொண்டார்.**

நாம் கிறிஸ்துவுக்குள் வளரும்படி, தேவன் நமக்குத் தந்திருக்கும் ஞானப் பால், வேத வசனங்கள்தான் **(1 பேதுரு 2:3).** எவ்வளவு ஜெபிக்கிறோமோ, அந்த அளவு வேத வசனங்களைத் தியானிக்க வேண்டும்.

வேத வசனத்தின் மூலம் ஆண்டவர் பேசுவார், நம்மைப் பரிசுத்தப்படுத்துவார், ஆறுதல்படுத்துவார், தைரியப்படுத்துவார், 'அவர் நம்மோடு இருக்கிறார்' என்ற தேவப் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளச் செய்வார்.

உங்களிடம் பரிசுத்த வேதாகமம் இல்லாவிட்டால், உங்களுக்கென்று ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்கிக் கொள்ளுங்கள். தினமும் தவறாமல் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, தியானியுங்கள். கர்த்தர் உங்களை விட்டு விலகாமல், உங்களோடிருப்பார்!

# தினமும் ஊழியம் செய்ய வேண்டும்!

**"... நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்." மத்தேயு 28:19, 20.**

"உலகத்தின் முடிவு பரியந்தம், உங்களை விட்டு விலகாமல், உங்களோடிருப்பேன்" என்று கர்த்தர் சொல்கிறார். எப்பொழுது?

நீங்கள் ஊழியம் செய்யும்போது!

"புறப்பட்டுப் போங்கள்!

சீஷராக்குங்கள்!

ஞானஸ்நானம் கொடுங்கள்!

உபதேசம் பண்ணுங்கள்!"

என்று, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நம் ஒவ்வொருவருக்கும் கட்டளை கொடுத்திருக்கிறார். அவருடைய இந்தக் கட்டளைகளின்படி நாம் செய்தால், அவரும், தான் வாக்குக் கொடுத்தபடியே நம்மோடிருப்பார்.

நீங்கள், ஏதாவது ஒரு விதத்தில் ஊழியம் செய்ய வேண்டும். **தினமும் ஆண்டவருக்காக ஏதாவது செய்து கொண்டிருக்க வேண்டும்.** நாம் எப்படி அவருக்கு ஊழியம் செய்ய முடியும்?

## 1. ஜெபிக்கலாம்!

இது எல்லா தேவப் பிள்ளைகளும் செய்யக் கூடிய ஊழியம். ஆத்துமாக்களுக்காக ஜெபிப்பது, ஒரு பெரிய ஊழியம். உங்களுக்கு வசதியான ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஜெபத்திற்காக ஒதுக்கி, தினமும் ஜெபியுங்கள். மதியமோ, மாலையோ, இரவிலோ, எந்தச் சமயத்தில் உங்களுக்கு

வசதியோ, அந்தச் சமயத்தில் அரைமணி நேரமோ, ஒருமணி நேரமோ ஒதுக்கி, ஜெபியுங்கள்.

நம் இந்திய மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள். மிஷனெரிமார்களுக்காக ஜெபியுங்கள். தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் கிராமம், அல்லது பட்டணம் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். உங்கள் ஜெபம் அநேக ஆத்துமாக்களைக் கர்த்தரண்டை கொண்டு வரும். பரலோகத்தில் இதன் பலனை நிச்சயமாக நீங்கள் காண்பீர்கள்.

## 2. அறிவிக்கலாம்!

உங்கள் பக்கத்து வீட்டாருக்கு, உங்களோடு வேலை செய்பவர்களுக்கு, உங்களோடு படிப்பவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிவியுங்கள். கர்த்தருடைய சுவிசேஷத்தைக் குறித்து அவர்களோடு பேச உங்களுக்குப் பயமாக இருந்தால், கைப் பிரதிகளை, சுவிசேஷப் பிரதிகளை அவர்களிடத்தில் கொடுங்கள். மற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிவிப்பதில் ஏற்படுகிற சந்தோஷம் வேறெதிலுமில்லை.

**ஒரு தகப்பனார், தினமும் கைப்பிரதிகளைக் கொடுக்கிற ஊழியத்தைச் செய்து வந்தார். ஒருநாள், அவர் வியாதிப்பட்டு, படுக்கையிலாகி விட்டார். அன்று அவரால் வெளியே போய் கைப்பிரதிகளைக் கொடுக்க முடியவில்லை. அது அவருக்கு மிகுந்த வேதனையாயிருந்தது.**

**பள்ளிக்கூடம் முடிந்து திரும்பிய அவருடைய சிறிய மகன், தகப்பனாருடைய வேதனையைப் புரிந்து கொண்டு, "அப்பா, இன்று உங்களுக்குப் பதிலாக நான் போய் கைப்பிரதிகளைக் கொடுத்து வரட்டுமா?" என்றான். தகப்பனாருக்கு மிகுந்த சந்தோஷம். ஜெபித்து, மகனை அனுப்பி வைத்தார்.**

**அந்தச் சிறிய மகனும் ஒவ்வொரு வீடாக இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அடங்கிய கைப்பிரதியைக் கொடுத்து கொண்டே வந்தான். ஒரு வீட்டின் கதவு**

**பூட்டப்பட்டிருந்தது. கதவைத் தட்டியும் யாரும் திறக்கவில்லை. ஒரு ஜன்னல் திறந்திருப்பதைப் பார்த்தான். அந்த ஜன்னல் வழியாக ஒரு கைப்பிரதியைப் போட்டு விட்டு, அடுத்த வீட்டை நோக்கிப் போனான்.**

**ஆனால், அந்தக் கைப்பிரதியின் மூலமாக ஒரு அற்புதம் நடந்தது. அந்த வீட்டிற்குள்ளிருந்த ஒரு சகோதரி வாழ்க்கையில் வெறுப்படைந்து, தற்கொலை செய்வதற்காக தூக்குக் கயிற்றை கழுத்தில் மாட்டுகிற நேரம்!**

**அந்தச் சகோதரி, 'அது என்ன?' என்று பார்ப்பதற்காக அந்தப் பிரதியை எடுத்து வாசித்தார்கள். அதன் மூலம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்தச் சகோதரியோடு பேசினார், ஆறுதல்படுத்தினார். அந்தச் சகோதரியின் உள்ளம் மாறினது. தற்கொலையிலிருந்து தப்பித்தார்கள்.**

தேவ வார்த்தைகளாலான ஒரு சிறிய கைப்பிரதி, ஒரு ஆத்துமாவை மரணத்தின் கண்ணியிலிருந்து விடுவித்தது.

அழிவை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு, ஆறுதலற்றுத் தவிக்கும் மக்களுக்கு, வேதனையில் வாடும் மக்களுக்கு இயேசு கிறிஸ்துவாகிய நற்செய்தியை அறிவியுங்கள். உங்கள் மூலமாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்.

## 3. கொடுக்கலாம்!

தேவனுடைய ஊழியத்திற்குக் கொடுப்பதின் மூலம், ஊழியம் செய்யலாம். நீங்கள் ஒரு ஊழியத்திற்குக் கொடுக்கும்போது, அந்த ஊழியத்தின் மூலம் சந்திக்கப்படுகிற ஆத்துமாக்களை, கர்த்தர் உங்கள் கணக்கில் வைப்பார்.

நீங்கள் கொடுக்கும்போது, உங்கள் பணம் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட பயன்படுத்தப்படுகிறதா? சுவிசேஷம் அறிவிக்க செலவு செய்யப்படுகிறதா? என்று பார்த்து, அப்படிப்பட்ட ஊழியங்களுக்குக் கொடுங்கள். அப்பொழுது, உங்கள் பங்குக்குப் பலன் பரலோகத்தில் பெருகும்.

கட்டாயத்திற்காக அல்ல, பெயருக்காக அல்ல, உற்சாகமாய் கர்த்தருக்கென்று கொடுத்தால், கர்த்தர் உங்கள் பணத்தைப் பயன்படுத்தி, ஆத்துமாக்களைச் சந்திப்பார். எத்தனை பெரிய சந்தோஷம்!

**வட இந்தியாவில் ஆலயம் இல்லாத கிராமங்களில், ஆலயம் கட்டுவதற்காகப் பணம் சேகரித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது, ஒரு வாலிப சகோதரி, 1,000 ரூபாய் காணிக்கையோடுகூட எனக்கு எழுதியிருந்த கடிதம், என் உள்ளத்தை அசைத்தது.**

**"நான் ஒரு ஏழைப் பெண். எனக்கு அப்பா இல்லை. என் தாயார் சிறிய ஊழியம் செய்கிறார்கள். நான் தையல் மிஷினை வைத்துத் தைத்து, கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து வந்தேன். ஆயிரம் ரூபாய் சேர்ந்திருந்தது. நீங்கள் வட இந்திய மக்களுக்கு ஆலயம் கட்ட பணம் சேகரிப்பதை அறிந்தேன். எனக்குள்ளும், 'இந்த ஊழியத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும்' என்ற வாஞ்சை என் உள்ளத்தில் எழுந்தது. நான் பல நாட்களாகச் சேமித்து வந்த ஆயிரம் ரூபாயை எடுத்து, இந்த ஊழியத்திற்கு அனுப்பியிருக்கிறேன்" என்று எழுதியிருந்தார்கள்.**

தனக்கென்று சேமித்து வைத்திருந்த எல்லாவற்றையும் இந்த சகோதரி கொடுத்து விட்டார்கள். பரலோகத்தில் இந்தச் சகோதரியின் பலன் மிகுதியாயிருக்கும். இம்மையிலும் நூறத்தனையான ஆசீர்வாதத்தைக் கர்த்தர் கொடுத்திருப்பார்.

கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட, ஏதாவது செய்து கொண்டேயிருங்கள். ஊழியம் செய்கிற உங்களை விட்டு, அவரால் விலகவே முடியாது.

**கர்த்தரோடிருங்கள்!** கர்த்தருடைய வார்த்தைகளைத் தியானியுங்கள். **கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.**

கர்த்தர் உங்களோடிருப்பார்.
கர்த்தர் உங்களை விட்டு விலகவே மாட்டார்.




# 3. பயப்படாதிருங்கள், உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்!

**(யோவான் 16:33)**

குஜராத்திலே ஆலயங்கள் இடிக்கப்படுகிறது! ஒரிஸ்ஸாவிலே மிஷனெரியும், அவருடைய இரண்டு பிள்ளைகளும் உயிரோடு கொழுத்தப்பட்டிருக்கிறார்கள்! பீஹாரிலே சுவிசேஷம் அறிவித்த மிஷனெரிகள் கொடூரமாகத் தாக்கப்படுகிறார்கள்! கேரளாவிலே ஜெபக் கூட்டங்களை நடத்திய மூன்று ஊழியர்கள் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்!

"குறிப்பிட்ட தேதிக்குள் மிஷனெரிகள் எல்லோரும் சுவிசேஷம் அறிவிப்பதை விட்டு விட்டு, போய்விட வேண்டும்" என்று கெடு விதித்தார்கள்.

"கிறிஸ்தவர்களாகி இருக்கிறவர்களும் மதம் மாறி விட வேண்டும். அல்லது, பயங்கர விளைவுகள் சம்பவிக்கும்" என்று பயமுறுத்தப் படுகிறார்கள்!

பயம்...'அடுத்து என்ன நடக்குமோ?' என்ற பயம்! "இனிக் கிறிஸ்தவர்களாக வாழ முடியுமா? கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க முடியுமா?" என்ற பயம்!

'இப்படியெல்லாம் சம்பவிக்கும்!' என்று அறிந்துதான், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **"பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;" (ஏசாயா 41:10)** என்று வாக்குக் கொடுத்தார்.

**"பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;" (ஏசாயா 41:10)** என்று வாக்குக் கொடுத்தவர், வாக்கு மாறாதவர். அவர், நம்மோடு கூட இருந்து நம்மை வழி நடத்துவார்.

என்றாலும், இது திருச்சபை கடந்து செல்ல வேண்டிய பாதைதான்.

ஆகவேதான், இயேசு கிறிஸ்து தன் பிள்ளைகளைப் பார்த்துச் சொல்கிறார்;

**"... உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்." யோவான் 16:33.**

# உபத்திரவம் உண்டு!

இயேசு கிறிஸ்து, தன்னை ஏற்றுக் கொண்டு, தன்னைப் பின்பற்றினால், "அவர்களுக்குப் பாடுகள் இல்லை, போராட்டங்கள் இல்லை" என்று பரிசுத்த வேதாகமத்தில் எந்த இடத்திலும் சொல்லவில்லை.

அதற்கு மாறாக, "**உபத்திரவம் உண்டு!**" என்றுதான் சொன்னார்.

ஆம். பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது உபத்திரவத்திற்கு நடுவில் நடப்பது. 'இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, அவரைப் பின்பற்றுவது' என்பது, பஞ்சு மெத்தையில் நடக்கிற வாழ்க்கையல்ல. கற்களும், முட்களும் நிறைந்த பாதையில் நடப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை!

**"... கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." 2 தீமோ. 3:12.**

**"... நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்..." (அப். 14:22)** என்று, ஆவியானவர் தேவ மனிதர்களைக் கொண்டு நமக்காக எழுதி வைத்திருக்கிறார்.

ஒரு சமயம், ஒரு வாலிப சகோதரி என்னிடத்தில் ஜெபிக்க வந்தாள். தான் இரட்சிக்கப்பட்டதின் நிமித்தம், அவளுக்கு வந்த உபத்திரவத்தைக் கண்ணீரோடு என்னிடத்தில் சொன்னாள்.

அவள், ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தைச் சார்ந்தவள்தான். குடும்பமாய் வாரத்திற்கு ஒருநாள் ஆலயத்திற்குச் சென்று வருவார்கள். அதன் பிறகு, மனம்போல வாழ்ந்து வந்தார்கள். காலையில் குடும்பமாக ஆலயம் சென்று வருவார்கள், மாலையில் சினிமாவுக்குச் செல்வார்கள்.

இந்த வாலிபப் பெண்ணும், உலகச் சிற்றின்பத்திலே வாழ்ந்து வந்தாள். ஒருநாள், ஒரு கூட்டத்தில் இயேசு கிறிஸ்து

அவளைச் சந்தித்தார். அவளுடைய வாழ்க்கை மாறினது. அவளுடைய நடை, உடை எல்லாம் மாறி விட்டது. அதிகமாக ஜெபிப்பாள், வேதம் வாசிப்பாள், ரேடியாவில் சினிமா பாட்டுக் கேட்பதையெல்லாம் விட்டு விட்டாள். பெற்றோருடன் சினிமாவுக்குப் போவதையும் விட்டு விட்டாள். இப்போது தன் சிநேகிதிகளோடு ஊர் சுற்றுவதும் இல்லை.

கொஞ்ச நாட்கள் அவளுடைய பெற்றோர் அவளது வாழ்க்கையைக் கவனித்தார்கள். அவளது மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடையாமல், கோபம் கொண்டார்கள். "ஏன் இப்படி மாறி விட்டாய்?" என்று விசாரித்தபோது, இயேசு கிறிஸ்து கொடுத்த இரட்சிப்பின் மகிழ்ச்சியைக் கூறினாள். ஆனாலும், அவர்கள் அவள் மீது கோபம் கொண்டு, "இந்த பக்தியெல்லாம் இந்த வயதில் உனக்கு வேண்டாம். நீ எப்பொழுதும் போல உன் சிநேகிதிகளோடு வெளியே போ. எங்களோடு சினிமாவுக்கு வர வேண்டும்" என்று பழைய பாவ வாழ்க்கைக்கு அவளைக் கட்டாயப்படுத்தினார்கள்.

"நான் பரிசுத்தமாய் வாழ்வது, என் பெற்றோருக்கே பிடிக்கவில்லை. முன்பு பாவ வாழ்க்கை வாழ்ந்தபோது, ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், இப்போது இயேசு கிறிஸ்துவுக்குள் புதியதொரு வாழ்வு வாழும்போது, என்னை உபத்திரவப் படுத்துகிறார்கள். எனக்காக ஜெபியுங்கள்" என்று சொல்லி, கண்ணீர் வடித்தாள்.

அவளது பரிசுத்த வாழ்க்கை, பெற்றோருடைய மனசாட்சியை வாதித்தபடியினால், அவர்கள் பாவத்தை விட்டு மனந்திரும்ப மனமில்லாமல், அவளைப் பாவ வாழ்க்கைக்கு வலியுறுத்தினார்கள். தேவப் பிள்ளைகளுக்கு வரும் உபத்திரவத்தைப் பாருங்கள்!

மற்றொரு சமயம், ஒரு தாயார் என்னைச் சந்தித்தார்கள். அவர்களுடைய சரீரமெல்லாம் காயங்கள்! அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஜெபித்தபடியினால், அவர்களுடைய கணவரே அவர்களை அடித்து, வேதனைப் படுத்தினார்கள். அவர்கள், ஆராதனைக்கு ஆலயத்திற்குப் போய்விட்டு வந்தால், அடிதான் கிடைக்கும். என்றாலும், அவர்கள் ஆலயத்திற்குச் செல்வதை நிறுத்தவில்லை. ஆலயம் முடிந்து வீடு செல்லும்போது, "ஆண்டவரே, அடியைத் தாங்கிக் கொள்ள பெலன் தாரும்" என்று ஜெபித்துக் கொண்டே வீட்டிற்குச் செல்வார்களாம்.

உபத்திரவம்...இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் உபத்திரவம்! **"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு"** என்று இயேசு கிறிஸ்து சொன்னபடி, நமக்கு உபத்திரவம் உண்டு. குடும்பத்தில் உபத்திரவம்! வேலை செய்கிற இடத்தில் உபத்திரவம்! குடியிருக்கிற இடத்தில் உபத்திரவம்! ஊழியத்தில் உபத்திரவம்! உபத்திரவம் உண்டு! என்றாலும், **பயப்படாதீர்கள். உபத்திரவத்திற்கு முடிவு உண்டு.**

உபத்திரவத்தில் என்ன செய்வது?

## திடன் கொள்ளுங்கள்!

**"... உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்." (யோவான் 16:33)** என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

உபத்திரவத்தில் சோர்ந்து விடாதபடி, திடன் கொள்ளுங்கள். காரணம், உலகத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து உங்களோடிருக்கிறார். உபத்திரவத்திற்கு மத்தியில், இயேசு கிறிஸ்து உங்களோடிருக்கிறபடியினால், திடன் கொள்ளுங்கள்.

1975ம் ஆண்டு, நான் ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்த ஆரம்ப நாட்கள். மிகுந்த நெருக்கம் வந்தது. நிந்தைகளும், பாடுகளும் என்னைச் சூழ்ந்து கொண்டது. நான் சொல்லாததைச் சொன்னதாக, செய்யாததைச் செய்ததாக நிந்தைகள் வந்தது. நான் மிகவும் சோர்ந்து போனேன்.

ஒருநாள் இரவு, சுமார் 11:00 மணி இருக்கும். ஆண்டவருடைய சமுகத்தில் போய், "ஆண்டவரே, என்னைக் குறித்து இப்படியெல்லாம் பேசுகிறார்கள். எனக்கு இந்த ஊழியம் வேண்டாம்! என்னை விட்டு விடும்! நான் ஏதாவது வேலை செய்து சம்பாதித்துக் கொண்டு, என்னால் முடிந்த ஊழியத்தைச் செய்கிறேன்!" என்று அழுது ஜெபித்தேன்.

அன்று, இயேசு கிறிஸ்து என்னைச் சந்தித்தார். என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "மகனே, திடன் கொள்!

**என்னை நோக்கிப் பார்! நான் ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராய் இருந்தபோதும், என்னையே, 'பிசாசு பிடித்தவன்' என்றும், 'பைத்தியம் பிடித்தவன்' என்றும் பரிகசித்தார்கள். என் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி, சிலுவையில் அறைந்தார்கள்!**

**இப்படிப்பட்ட உபத்திரவத்திற்கு மத்தியில்தான், நான் ஊழியம் செய்தேன். நீயும் இப்படிப்பட்ட பாடுகள் நடுவில்தான் ஊழியம் செய்ய வேண்டும். என்றாலும், ஒன்றை அறிந்து கொள். உனக்கு முன்பாக நான் நிற்கிறேன். உனக்கு வரக்கூடிய உபத்திரவங்கள் என்னைத் தாண்டித்தான் உன்னிடத்தில் வரமுடியும்! ஆகவே திடன் கொள்!" என்று சொல்லி, என்னை தைரியப்படுத்தினார்.**

அன்றைக்கு, என் நேசர் இயேசு கிறிஸ்து என்னோடு பேசிய வார்த்தைகள்தான், இன்றுவரை என்னைத் திடப்படுத்தி வருகிறது. எந்த உபத்திரவத்திலும், பாடுகளிலும் சோர்ந்து விடாதபடி அவருடைய பிரசன்னமே என்னைப் பெலப்படுத்தி வருகிறது. நீங்களும் திடன் கொள்ளுங்கள்! பாடுகள், உபத்திரவங்களைக் கண்டு **சோர்ந்து விடாதீர்கள்!** கர்த்தருடைய வார்த்தைகளை, வாக்குத்தத்தங்களை நினைத்துத் திடன் கொள்ளுங்கள். **"பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;" (ஏசாயா 41:10)** என்று வாக்குக் கொடுத்தபடி, அவர் உங்களோடேகூட இருக்கிறார். அவருக்குள் உங்களைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

**"... துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்." 1 பேதுரு 1:6.**

ஆம். பிரியமானவர்களே! இந்த **உபத்திரவம் கொஞ்சக் காலம்தான் (1 பேதுரு 5:10).** என்றைக்கும் நீங்கள் உபத்திரவத்திற்குள்ளேயே இருக்கப் போவதில்லை. ஆகவே, **திடன் கொள்ளுங்கள்.**

## பொறுமையாயிருங்கள்!

**"... உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்." (ரோமர் 12:12).**

ஆம், பிரியமானவர்களே! உங்கள் உபத்திரவத்தில், பொறுமையாக அதை சகித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது, முடிவு ஆசீர்வாதமாயிருக்கும். **“இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்;...” யாக். 5:11.**

**‘யோபு’** என்கிற ஒரு பக்தன், தன் இழப்புகளிலும், நிந்தைகளிலும், உபத்திரவத்தைப் பொறுமையோடு சகித்தார். கொஞ்ச நாட்கள்தான் அந்த உபத்திரவம். கர்த்தர், யோபுவை உபத்திரவத்திலிருந்து விடுதலையாக்கி, இரண்டு மடங்கு அவரை ஆசீர்வதித்தார்.

நீங்களும் உபத்திரவத்தைப் பொறுமையோடு சகித்தால், முடிவு இரட்டிப்பான ஆசீர்வாதமாயிருக்கும். உங்கள் குடும்பத்தில், வேலையில், ஊழியத்தில், உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளுங்கள். அதே இடத்தில், கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

**“... தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும்.” 1 பேதுரு 2:19.**

நீங்கள் தவறு ஏதும் செய்யாமலே அநியாயமாய் பாடுபடும்போது, அதைப் பொறுமையோடு சகித்தால், அதுதான் தேவனுக்குப் பிரியம். உங்களைக் கட்டாயம் அவர் ஆசீர்வதிப்பார். இயேசு கிறிஸ்துவும் அப்படியே உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்தாரே!

**“நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடும்படும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்.**

**இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள்**

**தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.'' 1 பேதுரு 2:20, 21.**

இயேசு கிறிஸ்துவைப் போல, உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளுங்கள்.

## ஜெபம் பண்ணுங்கள்!

**"உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்;'' (யாக். 5:13).** உபத்திரவங்கள், பாடுகள் வரும்போது, ஜெபிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள். அவர் சிலுவையில் வேதனையோடு தொங்கிக் கொண்டிருந்தபோது, அந்த உபத்திரவத்திற்கு நடுவிலும் ஜெபித்தார். தன்னை உபத்திரவப்படுத்தின மக்களுக்காக ஜெபித்தார்.

**"...பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே...'' (லூக்கா 23:34)** என்று ஜெபித்தார்.

நாமும் இப்படித்தான் ஜெபிக்க வேண்டும். உங்களை உபத்திரவப்படுத்துகிற மக்களுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் அவர்களை மன்னிக்கும்படி ஜெபியுங்கள்.

**ஒரிஸ்ஸாவில் 34 ஆண்டுகளாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜனங்களுக்கு நன்மை செய்து வந்த ஆஸ்திரேலிய மிஷனெரி, கிரஹாம் ஸ்டூவர்டும், அவரது இரண்டு பிள்ளைகளும் (பிலிப்பு - (9 வயது), தீமோத்தி - (7 வயது)) கொடூரமாக உயிரோடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டு, கொல்லப்பட்டார்கள். தன் கணவரையும், தன் இரண்டு செல்லப் பிள்ளைகளையும் ஒரே நாளில் பறிகொடுத்த மிஷனெரியின் மனைவி, திருமதி கிளாடிஸ் கிரஹாம் அவர்களுடைய உள்ளம், எத்தனை வேதனை அடைந்திருக்கும்?**

**"இந்தக் கொடுஞ்செயலைச் செய்த அந்தக் கொடியவர்களை இயேசு கிறிஸ்து மன்னிக்கட்டும். நானும்**

**அவர்களை மன்னிக்கிறேன்" என்று அந்தச் சகோதரி கூறினார்களே! இதுதான் இயேசு கிறிஸ்து நமக்குக் கற்றுக் கொடுத்த மன்னிக்கும் பண்பு.**

**நீங்களும் மன்னியுங்கள்.** உங்கள் வீட்டில், உங்கள் தெருவில், உங்கள் ஊரில், உங்கள் வேலையில், உங்கள் தொழிலில், உங்கள் ஊழியத்தில், உங்களை உபத்திரவப் படுத்துகிறவர்களை மன்னித்து விடுங்கள். **அவர்களுக்காக ஜெபியுங்கள்.**

யோபு, தன் உபத்திரவங்களுக்கு மத்தியிலும், தன் சிநேகிதருக்காக ஜெபித்தபோதுதான், ஆண்டவர் அவருடைய சிறையிருப்பை மாற்றி, இரண்டு மடங்கு அவரை ஆசீர்வதித்தார் **(யோபு 42:10).**

நீங்களும், உங்கள் **உபத்திரவங்களுக்கு மத்தியில், மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.** நீங்களும் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது, கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார். உங்களை இரண்டு மடங்கு ஆசீர்வதிப்பார்.

**உபத்திரவம் உண்டு, பயப்படாதீர்கள்!**

உபத்திரவத்திற்கு மத்தியில் இயேசு உங்களோடிருக்கிறார்!

**திடன் கொள்ளுங்கள்!**

**பொறுமையாயிருங்கள்!**

**ஜெபியுங்கள்!**

உபத்திரவங்களைக் **கர்த்தர் நன்மைகளாக மாற்றுவார்!**




# 4. பயப்படாதே, நான் உயிரோடிருக்கிறேன்!

**"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்,..." வெளி. 1:18.**

உலகத்தில் எத்தனையோ ஞானிகள், தேசத் தலைவர்கள், மதத் தலைவர்கள் தோன்றினார்கள். ஞானிகள், சில தத்துவங்களைச் சொன்னார்கள். தலைவர்கள், தேசத்திற்கு, சமுதாயத்திற்கு சில நன்மைகளைச் செய்தார்கள், மரித்தார்கள். அவர்கள் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறைகள் நினைவிடங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன.

அவர்களுடைய கல்லறையில் மலர் வளையங்கள் வைத்து, அவர்களுக்கு மரியாதை செய்யப்படுகிறது. அநேகக் கல்லறைகளெல்லாம் பளிங்குக் கற்களால் மூடப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த உலகத்தில் ஒரே ஒருவருடைய கல்லறை மாத்திரம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அது, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கல்லறையே!

எருசலேமில் இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையைப் பார்க்கச் சென்றிருந்தேன். அந்தக் கல்லறை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு யாரும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதில்லை. இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்குள் சென்று, அவருடைய சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்தைத் திரளான மக்கள் பார்த்து விட்டுச் செல்கிறார்கள். அந்தக் கல்லறையின் வாசலில்,

"HE IS NOT HERE, HE IS RISEN" **(இயேசு இங்கேயில்லை, அவர் உயிர்த்தெழுந்தார்)** என்று, ஆங்கிலத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லறையில் யாரும் இயேசு கிறிஸ்துவைத் தேடுவதில்லை. "இந்தக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்" என்று சொல்லி, அவரைத்

துதித்து, ஜெபித்து விட்டுச் செல்கிறார்கள். **இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்** என்பதற்கு, இந்தக் கல்லறையே இன்றும் சாட்சியாக இருக்கிறது.

இந்த உலகத்தில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, இன்றும் உயிரோடிருக்கிற ஒரே ஒருவர், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே!

காரணம், இயேசு கிறிஸ்து வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய தேவன்! அவர் உயிரோடிருக்கும்போதே, தன் சிலுவை மரணத்தைக் குறித்தும், தன் உயிர்த்தெழுதலைக் குறித்தும், தன்னுடைய சீஷர்களிடத்தில் சொன்னார். அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.

**"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்," (வெளி. 1:18)** என்று முழங்கினார்.

ஆம், இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தன்னுடைய சீஷர்களுக்கு முதலாவது தன்னை வெளிப்படுத்தின சம்பவம், பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

**"வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.**

**அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்." யோவான் 20:19,20.**

பயந்துபோய், அறை வீட்டிற்குள் முடங்கிக் கிடந்த தன்னுடைய சீஷர்களை இயேசு கிறிஸ்து சந்தித்தார். இயேசு கிறிஸ்து உயிரோடிருப்பதை அவருடைய சீஷர்கள் கண்டபோது, அவர்களுடைய பயங்கள் மாறி, அவர்களுக்குள் சந்தோஷம் உண்டாயிற்று.

உயிர்த்தெழுந்த அதே இயேசு கிறிஸ்து, இன்று உங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். உங்கள் பயங்களை சந்தோஷமாக மாற்ற வந்திருக்கிறார்.

**"பயப்படாதீர்கள், நான் உயிரோடிருக்கிறேன், சந்தோஷமாய் இருங்கள்!"**என்று, உங்களைப் பார்த்துச் சொல்கிறார். உங்கள் பயங்கள் எதுவாயிருந்தாலும், இயேசு கிறிஸ்து அதை மாற்றுவார். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து, உங்கள் பயங்களைச் சந்தோஷமாய் மாற்றுவார்.

சீஷர்களுக்குள்ளே காணப்பட்ட பயங்கள் என்ன? அதை இயேசு கிறிஸ்து எப்படி மாற்றினார்? இன்று உங்களுக்குள் காணப்படும் பயம் என்ன? இதை இயேசு கிறிஸ்து எப்படி மாற்றுவார்? என்பதைப் பற்றி தியானிப்போம்.

## மனுஷரைக் குறித்த பயம்!

இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவுடன், அவருடைய சீஷர்களுக்குள்ளே பயம் உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்த யூத மதத் தலைவர்கள், தங்களையும் கொன்று போடுவார்கள் என்று பயந்தார்கள். அந்த மனுஷர்களைக் குறித்த பயத்தினால், வெளியில் நடமாடப் பயந்து, பூட்டிய அறை வீட்டுக்குள்ளேயே இருந்தார்கள்.

இயேசு கிறிஸ்து, தன் சீஷர்களுடைய அந்த பயத்தை மாற்றுவதற்காக, அவர்கள் இருந்த அறைக்குள்ளே கடந்து வந்தார். "நான் உயிரோடிருக்கிறேன்" என்று கூறி, அவர்களுடைய பயத்தை மாற்றினார்.

இன்று நீங்களும், மனுஷரைக் குறித்த பயத்தினால் கலங்கிக் கொண்டிருக்கலாம்! நீங்கள் வசிக்கிற இடத்தில், நீங்கள் வேலை செய்கிற இடத்தில், தொழில் செய்கிற இடத்தில், உங்களைப் பயப்படுத்தக் கூடிய பொல்லாத மக்கள் இருக்கலாம்! பொறாமையினிமித்தம், அவர்கள் உங்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கலாம்! நீங்கள் ஊழியம் செய்கிற இடத்தில், உங்கள் ஊழியத்திற்கு விரோதமாக ஜனங்கள் எழும்பியிருக்கலாம்!

**"நான் உயிரோடிருக்கிறேன், நீ பயப்படாதே!"** என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பார்த்துச் சொல்கிறார்.

**ஒருமுறை, செய்தித்தாளில் ஒரு வேதனையான காரியத்தை வாசித்தேன். ஒரு வாலிப மகள், கல்லூரிக்குச்**

**சென்று திரும்பும் வழியில், சில வாலிபர்கள் அவளைக் கேலி செய்தார்கள். அவள் பயத்தோடு வீடு வந்து சேர்ந்தாள். அடுத்த நாளும், அந்த வாலிபர்கள் அவளைப் பரிகசித்தார்கள். அவள் பேசாமல் பயந்து, ஒதுங்கிப் போனாள். தினமும் அவள் வரும் வழியில் அந்த வாலிபர்கள் நின்றார்கள். "உன்னைக் கடத்திச் சென்று விடுவோம்" என்று சொல்லி, அவளைப் பயமுறுத்தினார்கள்.**

**அவள், தன் தாயினிடத்தில் சொன்னாள். தாய் அதை அவ்வளவு பெரிதாகவே எடுத்துக் கொள்ளவில்லை. "நீ பதில் பேசாமல் ஒதுங்கிப் போய் விடு" என்று ஆலோசனை கொடுத்து அனுப்பினார்கள். அவளுக்கோ, கல்லூரிக்குச் செல்லவே பயம். 'வழியில் நிற்கும் வாலிபர்கள், ஏதாவது செய்து விடுவார்களோ?' என்ற பயம்.**

**சில நாட்கள், தன் தாயினிடத்தில் சொல்லிப் பார்த்தாள். தாய் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவேயில்லை. கடைசியில் ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, தற்கொலை செய்து கொண்டாள்.**

எத்தனை வேதனையான காரியம் பாருங்கள்! காரணம், மனிதர்களைக் குறித்த பயம்!

**"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்;" (நீதி. 29:25)** என்ற, தேவனுடைய வார்த்தை எத்தனை உண்மையுள்ளது! ஆகவே, **மனுஷருக்குப் பயப்படாதீர்கள்.**

"ஐயா, தீங்கு செய்யக்கூடிய பொல்லாத, கொடூரமான ஜனங்கள், எனக்கு விரோதமாக எழும்பியிருக்கும்போது, எப்படி பயமில்லாமல் என்னால் இருக்க முடியும்? என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பலாம்!

பிரியமானவர்களே, உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்து உங்களோடிருப்பதால், பயம் உங்களை விட்டு விலகும். பயப்படக்கூடிய காரியங்கள் சம்பவித்தாலும், இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம், உங்கள் பயத்தை விலக்கிப் போடும்.

**"... பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்;" (ஏசாயா 41:10)** என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

"ஆண்டவரே, நீர் என்னோடிருக்கிறபடியினால், உமக்கு ஸ்தோத்திரம்!" என்று, ஆண்டவரைத் துதித்துக்

கொண்டேயிருங்கள். அவருடைய பிரசன்னம் உங்களைத் தைரியப்படுத்தும்.

1998ம் ஆண்டில், உத்திரப் பிரதேசத்திலுள்ள, 'வாரணாசி' என்ற இடத்திற்கு நான்கு நாட்கள் ஊழியத்திற்காகச் சென்றிருந்தேன். முதல் இரண்டு நாட்கள், கூட்டங்கள் ஆசீர்வாதமாக முடிந்தது. ஏராளமான மக்கள், தங்களை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அநேகர், இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் அற்புதமாக சுகம் பெற்று, சாட்சி கூறினார்கள்.

மூன்றாவது நாள், எனது வழக்கத்தின்படி, அந்த நாளின் கூட்டத்திற்காக ஜெபிக்க, மாலை 3:30 மணிக்கு முழங்கால்படியிட்டேன். தாகத்தோடு கூட்டத்திற்கு வரும் அந்த ஏழை மக்களை நினைத்தப் பொழுது, என் கண்களில் கண்ணீர் வடிந்தது. "இந்த ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்து தன்னை வெளிப்படுத்த வேண்டும்" என்று ஜெபித்துக் கொண்டே இருந்தேன்.

சுமார் 4:30 மணிக்கு, திடீரென்று ஏராளமான தேவ தூதர்கள், நான் ஜெபித்துக் கொண்டிருந்த அறைக்குள் இறங்கினார்கள். என்னைச் சுற்றிலும் அநேக தேவ தூதர்கள் உலாவுவதை என்னால் காண முடிந்தது. அநேக நாட்களுக்குப் பிறகு, இப்படி ஏராளமான தேவ தூதர்களைத் தரிசித்தபடியினால், என் ஆவியில் பெரிய சந்தோஷம் உண்டாயிற்று. திடீரென்று கூட்டம் நடக்கிற மைதானத்தை ஆவியானவர் எனக்குக் காண்பித்தார். அந்த மைதானத்திலும் ஏராளமான தேவ தூதர்கள் இறங்கு வதையும், உலாவுவதையும் ஆவியானவர் எனக்குக் காண்பித்தார்.

அந்தக் காட்சியைக் கண்டதும், "கர்த்தர் இன்று கூட்டத்தில் பெரிய காரியங்களைச் செய்யப் போகிறார்" என்கிற மகிழ்ச்சி எனக்குள் உண்டாயிற்று. நான் கர்த்தரைத் துதிக்க ஆரம்பித்தேன். சுமார் ஒருமணி நேரம் அந்த தேவ தூதர்களின் பிரசன்னம், என்னைச் சூழ்ந்திருந்தது.

ஜெபித்து முடித்து விட்டு, கூட்டத்திற்குச் செல்ல ஆயத்தமானேன். என்னை அழைத்து செல்லவிருந்த சகோதரர், "கூட்டம் நடக்கிற இடத்தில் சில பிரச்சனைகள், கொஞ்சம் தாமதமாக வருகிறேன்" என்று, தொலைபேசியில் என்னோடு பேசினார்.

**நடந்தது இதுதான்: சில கலவரக்காரர்கள், கூட்டத்திற்கான ஆயத்த வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சகோதரரிடத்தில் சென்று, “இந்தக் கூட்டம் நடக்கவே கூடாது. உடனே கூட்டத்தைத் தடை செய்யுங்கள்” என்று மிரட்டினார்கள். கொண்டு வந்திருந்த மண்ணெண்ணையை மேடையில் ஊற்றி, தீப்பெட்டியை எடுத்துத் தீ வைக்க முயற்சித்தார்கள். ஆனால், நெருப்புப் பற்றவில்லை.**

**ஆகவே, கோபம் கொண்டு, மேடையில் கட்டியிருந்த திரையைக் கத்தியினால் கிழித்து, சேதப்படுத்தினார்கள். ஒலி பெருக்கிக் கருவி மற்றும் மின் விளக்குகளை எல்லாம் உடைத்தார்கள். சுமார் ஒருமணி நேரம் அந்தக் கொடூரச் செயலைச் செய்து கொண்டிருந்தார்கள். அதற்குள் கூட்டத்திற்குப் பொது மக்கள் வர ஆரம்பித்து விட்டபடியினால், போய் விட்டார்கள். என்றாலும், வழியிலே காத்திருந்து, நமது ஊழியத்தைச் சார்ந்த இரண்டு சகோதரர்களைக் கொடூரமாகத் தாக்கினார்கள். கொலை செய்வதற்குக் கத்திகள், கோடாரிகளை எடுத்தார்கள். கர்த்தர் அற்புதமாக அவர்கள் கையிலிருந்து நம்முடைய ஊழியர்களைத் தப்புவித்தார்.**

இத்தனைப் போராட்டத்திற்கு நடுவிலும், ஆண்டவருடைய வார்த்தையை அறிவிக்கச் சென்றேன். என் உள்ளத்தில் அந்தப் பொலாத மக்களைக் குறித்த பயமேயில்லை. காரணம், இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம். அவர், தம்முடைய தூதர்களை அனுப்பி, என்னைப் பெலப்படுத்தினார். அவர் என்னோடுகூட இருக்கிறதை என்னால் உணர முடிந்தது. ஆகவே, என் உள்ளத்தில் பயமே எழும்பவில்லை. அடுத்த இரண்டு நாட்களும்கூட, தைரியமாக சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் கிருபை செய்தார்.

நீங்களும் உயிரோடிருக்கும் இயேசு கிறிஸ்துவை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டால், அவருடைய பிரசன்னம் எப்பொழுதும் உங்களோடிருந்தால், நீங்கள் பயப்பட மாட்டீர்கள்.

**“கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?**

**என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள்.**

**எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.'' (சங். 27:1-3)** என்று நீங்களும் சொல்லலாம்.

## எதிர்காலத்தைக் குறித்த பயம்!

"இந்த இயேசு கிறிஸ்துவை நம்பி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவரைப் பின்பற்றினோமே! இப்பொழுது, இயேசு கிறிஸ்து மரித்து விட்டாரே! இனி என்ன செய்வது?" என்று எதிர்காலத்தைக் குறித்த பயம் சீஷர்களுக்குள் உண்டாயிற்று. "இனி என்ன செய்யப் போகிறோம்? எப்படி வாழப் போகிறோம்?" என்று சீஷர்கள் பயந்து கொண்டிருந்தபோது, உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து, அவர்கள் நடுவில் வந்து நின்றார்.

"நான் உயிரோடிருக்கிறேன். **பயப்படாதீர்கள்!** இதுவரை உங்களோடுகூட நான் இருந்ததுபோல, இனிமேலும் உங்களோடுகூட இருந்து, உங்களை நான் வழி நடத்துவேன். **நாளைய தினத்தைக் குறித்துப் பயப்படாதீர்கள்!**'' என்று தன்னுடைய சீஷர்களைத் தைரியப் படுத்தினார்.

இன்று நீங்கள், உங்கள் எதிர்காலத்தைக் குறித்துப் பயப்படுகிறீர்களோ? உங்கள் மேல் படிப்பு, தொழில் காரியம், வேலைக் காரியம், பிள்ளைகளின் எதிர்காலம்...என்று, ஏதோ ஒரு காரியத்தில், "இனி என்ன செய்வது?" என்று பயந்து கொண்டிருக்கிற உங்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து சொல்கிறார்:

**"பயப்படாதே, நான் உயிரோடிருக்கிறேன்!"** என்று.

**அநேக ஆண்டுகளுக்கு முன்பாக, சென்னைப் பட்டணத்தில், ஒரு வாலிபனைச் சந்தித்தேன். மிகுந்த துக்கத்தோடு காணப்பட்ட அந்த வாலிபனிடத்தில், "உன் துக்கத்திற்குக் காரணம் என்ன?" என்று விசாரித்தேன்.**

அவன் கண்ணீர் விட்டு அழுதான். "தற்காலிகமாக ஒரு வேலை செய்கிறேன். சம்பளம் மிகக் குறைவு. இந்தச் சம்பளத்தைக் கொண்டு, சென்னைப் பட்டணத்தில் வாழ்வது மிகவும் கடினம். ஆகவே, மாதத்தின் முதல்வாரம் மட்டும், ஒருநாளில் மூன்று வேளை சாப்பிடுவேன். இரண்டாவது, மூன்றாவது வாரங்களில், இரண்டு வேளைதான் சாப்பிடுவேன். கடைசி வாரம் வரும்போது, தினமும் ஒரு வேளைதான் சாப்பிட முடியும்.

இந்நிலையில் நான் செய்கிற இந்த வேலையும், இன்னும் 15 நாட்களுக்குத்தான். பிறகு என்ன செய்வது? உயர் பதவியிலுள்ள என் உறவினர்களை எல்லாம் தேடிப் போய், உதவி கேட்டேன். யாரும் எனக்கு உதவி செய்ய முன் வரவில்லை. இனி என்ன செய்வது? எனக்கு ஒரு வழியும் இல்லை" என்று சொல்லிக் கண்ணீர் விட்டான்.

எதிர்காலத்தைக் குறித்து பயம்! "அடுத்து என்ன செய்வது?" என்ற ஒரு கலக்கம், அந்த வாலிபனுக்குள் காணப்பட்டது.

நான் அவனிடம், "இயேசு கிறிஸ்து இருக்கிறார். அவர் உனக்கு உதவி செய்வார்! உன் வாழ்க்கையை அவருடைய கரத்தில் கொடு" என்றேன். அவனும் முழு இருதயத்தோடு இயேசு கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணித்தான். இருவரும் சேர்ந்து ஜெபித்தோம். ஜெபித்த உடனேயே அவனுக்குள்ளிருந்த பயம் அவனை விட்டு விலகினது. எதிர்காலத்தைக் குறித்த ஒரு நம்பிக்கை, அவனுடைய உள்ளத்தில் உண்டானது.

ஒரு வாரம் கழித்து, மகிழ்ச்சியோடு மீண்டும் அந்த வாலிபன் என்னைப் பார்க்க வந்தான். "நான் தேடாமலேயே, முயற்சி எடுக்காமலேயே, அற்புதமாக எனக்கு ஒரு வேலை கிடைத்திருக்கிறது" என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

ஆம், ஆண்டவர் இயேசு கிறிஸ்து அற்புதமான வழியை அவனுக்குத் திறந்தார். அவன் தற்காலிகமாக வேலை செய்து கொண்டிருந்த இடத்தில், அவனுக்கு மேலதிகாரியாக இருந்தவர், அவனை அழைத்து, நிரந்தரமான நல்ல ஒரு வேலையை அவனுக்குக் கொடுத்தார்.

"என்னோடுகூட அநேகர் தற்காலிகமான வேலையில் இருக்கும்போது, அந்த அதிகாரி, என்னை மாத்திரம் அழைத்து,

**எனக்கு மாத்திரம் நிரந்தர வேலை கொடுக்க என்ன காரணம்? இது மனிதனால் வந்தது அல்ல. இயேசு கிறிஸ்துவே எனக்காக இந்த அற்புதம் செய்தார்" என்று அந்த வாலிபன் மகிழ்ச்சியோடு கூறினான். ஆசீர்வாதமான ஒரு எதிர்காலத்தை ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவனுக்கு அமைத்துக் கொடுத்தார்.**

அந்த வாலிபனுக்கு அற்புதம் செய்த இயேசு கிறிஸ்து, உங்களுக்குச் செய்ய மாட்டாரா? நிச்சயமாகச் செய்வார்! எதிர்காலத்தைக் குறித்து, **பயப்படாதீர்கள்.** உங்கள் எதிர்காலத்தை இயேசு கிறிஸ்துவின் கரத்தில் கொடுத்து விடுங்கள்.

உங்கள் மேல் படிப்பிற்கு வழிகளைத் திறப்பார்! ஜெயம் தருவார்! வேலைக்கு வழி உண்டாக்குவார்! தொழிலைப் பெருகச் செய்வார்! ஊழியத்தை ஆசீர்வதிப்பார்!

**பயப்படாதீர்கள், இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்!**

## மரண பயம்!

"இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்த மதத் தலைவர்கள், தங்களையும் கொன்று போடுவார்கள்" என்ற மரண பயம், சீஷர்களுக்குள்ளே காணப்பட்டது. பயங்களிலே மிகவும் வேதனையானது, மரண பயம்!

**சில ஆண்டுகளுக்கு முன்பாக, தென் கொரியாவிற்கு ஒரு குழுவாகச் சென்றிருந்தோம். அங்கிருந்து திரும்பும்போது, ஒரு பெரிய விமானத்தில் பிரயாணப்பட்டோம். விமானம், ஹாங்காங்கிலிருந்து சிங்கப்பூரை நோக்கி வந்து கொண்டிருந்தது. 35 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தது. விமானம் எத்தனை அடி உயரத்தில், எத்தனை கி.மீ. வேகத்தில் பறக்கிறது? என்பதெல்லாம் விமானத்திலுள்ள வீடியோ திரையில் தெரியும்.**

**திடீரென்று எங்கள் விமானம், 'தட...தட' என்ற ஓசையோடு கீழே இறங்க ஆரம்பித்தது. சில வினாடிக்குள் விமானம் 10 ஆயிரம் அடிகள் கீழே இறங்கி விட்டது. இருதயமே வெளி வந்து விட்டது போன்ற ஒரு உணர்வு. இந்தச் சூழ்நிலையில், மக்கள் எப்படி இருக்கிறார்களென்று பார்த்தேன். ஒரு சிலரைத்**

**தவிர, அநேகருடைய முகங்களில் மரண பயம் காணப்பட்டது. “விமானம் விழுந்து நொறுங்கி விடுமோ? நாம் மரித்து விடுவோமோ?” என்கிற பயம், எல்லாருடைய முகத்திலும் வெளிப்பட்டது.**

**சில நிமிடங்கள் கழித்து, “ஆபத்து நீங்கி விட்டது, இனிப் பயப்பட ஒன்றுமில்லை” என்று தலைமை விமானி பேசின வார்த்தைகளைக் கேட்ட பிறகுதான், எல்லோருடைய முகத்திலும் பயம் நீங்கி, உற்சாகம் வந்தது.**

இப்படித்தான் இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள், மரண பயத்தினால் கலங்கியிருந்தபோது, இயேசு கிறிஸ்து வந்து, அவர்கள் நடுவே நின்று, அவர்களை தைரியப்படுத்தினார். “நான் மரணத்தை ஜெயித்து, உயிரோடு எழுந்தேன். நான் உயிரோடிருக்கிறேன்” என்று சொல்லி, இயேசு கிறிஸ்து, தன் சீஷர்களின் பயத்தைப் போக்கினார்.

இன்று, ஒருவேளை நீங்கள் மரண பயத்தினால் கலங்கிக் கொண்டிருக்கலாம்! மரணத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து, இன்று உங்களைத் தைரியப்படுத்துகிறார்.

மனிதனை மரண பயத்திலிருந்து விடுவிப்பதற்காகவே, இயேசு கிறிஸ்து சிலுவையில் மரணத்தை ருசி பார்த்தார். **“...மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,**

**ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.” எபி. 2:14,15.**

நம்மை மரண பயத்திலிருந்து விடுதலை செய்வதற்காக, அவர் சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் மரணத்தை ஜெயித்து, உயிரோடு எழுந்தார்.

**“...என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;” (யோவான் 11:25)** என்று, இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை நம்பி, நம்முடைய வாழ்க்கையில் அவரை நாம் ஏற்றுக் கொள்ளும்போது, மரண பயத்தை நம்மை விட்டு எடுத்துப் போடுகிறார். “என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்” என்ற

அவருடைய வார்த்தையின்படி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள், இந்த உலகத்தில் மரித்தாலும், அவர்களுடைய ஆத்துமா, பரலோகத்தில் இயேசு கிறிஸ்துவோடு பிழைத்திருக்கிறது. ஆகவேதான், தேவனுடைய பிள்ளைகள் மரணத்தைக் கண்டு பயப்படுவதில்லை.

'**ஸ்தேவான்**' (Stephen) என்கிற ஒரு வாலிபன், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, "இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்" என்று பிரசங்கிக்க ஆரம்பித்தார். அவர் இயேசு கிறிஸ்துவை அறிவித்த ஒரே காரணத்திற்காக, மதத் தலைவர்கள் அவருக்கு விரோதமாக எழும்பினார்கள். அவரைக் கல்லெறிந்து கொலை செய்யும்படி தூண்டினார்கள்.

அவரை அந்தக் கொடிய மக்கள், கல்லெறிந்து கொல்லும்போதும், அவர் மரணத்தைக் குறித்துப் பயப்படவில்லை.

"**அவன்** (ஸ்தேவான்) **பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு:**

**அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்.**

**அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள்.**

**அவனோ, முழங்கால்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்." அப். 7:55, 56, 59, 60.**

ஸ்தேவான், தன் வாலிப வயதில் வேதனையான ஒரு மரணத்தைச் சந்தித்தபோதும், அவர் மரணத்தைக் குறித்துப் பயப்படவில்லை.

காரணம், மரணத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து அவரோடிருந்தார்.

இன்று, உங்கள் இருதயத்தை சோதித்துப் பாருங்கள். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து உங்களோடிருக்கிறாரா? அவரை உங்கள் வாழ்க்யையில் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா?

இன்று மரணம் உங்களைச் சந்திக்குமானால், நீங்கள் தைரியத்தோடு மரணத்தைச் சந்திக்க ஆயத்தம் தானா? சோதித்துப் பாருங்கள். மரணத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து உங்களோடிருந்தால், **“மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?” (1 கொரி. 15:55)** என்று நீங்களும் தைரியமாக கேட்கலாம்!

இந்த அனுபவத்தை நமக்குக் கொடுப்பதற்காகத்தான், இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்து, உயிர்த்தெழுந்தார். இன்று, இப்பொழுது, இந்தச் செய்தியை வாசிக்கும்போது, உங்கள் அருகில் இயேசு கிறிஸ்து நிற்கிறார்! இந்தச் செய்தியின் மூலம் உங்களோடு பேசுகிறார்!

**“பயப்படாதே, நான் உயிரோடிருக்கிறேன்!”**

என்று சொல்லும், இயேசு கிறிஸ்துவை நோக்கி ஜெபியுங்கள்.




# 5. பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; (ஏசாயா 54:4)

ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து, பயந்து கொண்டிருக்கிறீர்கள்! "இது எப்படி முடியுமோ?" என்று கலங்குகிறீர்கள்! "நான் ஜெயம் பெறுவேனா? எனக்கு நன்மையான காரியம் நடக்குமா? என் நிந்தைகள் மாறுமா?" என்று, ஏதோ ஒரு காரியத்திற்காகப் பயந்து கொண்டிருக்கிறீர்கள்! உங்களைப் பார்த்துத்தான் ஆண்டவர் சொல்கிறார்;

**"பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை;" (ஏசாயா 54:4)** என்று.

**"என் மகனே, நீ பயப்படாதே! என் மகளே, நீ பயப்படாதே! நீ வெட்கப்படுவதில்லை!"** என்று, உங்கள் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்கிறார். அவர் உங்களை வெட்கப்பட விடமாட்டார். **கலங்காதீர்கள்! நீங்கள் பயப்படுகிறபடி, ஒன்றும் சம்பவிப்பதில்லை.**

**"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;" ஏசாயா 61:7.**

**கல்லூரிப் பட்டப் படிப்பை முடித்திருந்த ஒரு வாலிபன், மேல் படிப்பிற்காகப் பல இடங்களுக்கு விண்ணப்பித்திருந்தான். ஆண்டவர், தனது மேல் படிப்பிற்கு வழி திறப்பார் என்று நம்பிக்கையோடு காத்திருந்தான். கல்லூரிகளெல்லாம் மறுபடியும் திறந்து, அவனோடு படித்த யாவரும், மேல் படிப்பு படிக்கச் சென்று விட்டார்கள்.**

**இவனுக்கு ஒரு கல்லூரியிலிருந்தும் பதில் வரவில்லை. பலர் அவனிடம் மேல் படிப்பைக் குறித்து விசாரிக்கும்போது, "ஆண்டவர் இயேசு கிறிஸ்து, எனக்கு ஒரு வழியைத் திறப்பார்" என்று விசுவாசத்தோடு கூறுவான். அநேகர் அவனைப் பார்த்து நகைத்தார்கள். "கல்லூரிகளெல்லாம் மறுபடியும் திறந்து, எல்லோரும் படிக்கப் போய் விட்டார்கள். இனி உனக்கு எங்கே இடம் கிடைக்கப் போகிறது?" என்று சொன்னார்கள்.**

**திடீரென்று ஒருநாள், மேல் படிப்பு படிக்க வந்து சேர்ந்து கொள்ளும்படி, இரண்டு பிரபலமான கல்லூரிகளிலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. இப்போது, எந்தக் கல்லூரியைத் தேர்ந்தெடுப்பது? என்பதே அவனது பிரச்சனையாகி விட்டது. எல்லோரும் ஆச்சரியப்படும்படி, ஆண்டவர் அவனுக்கு வழியைத் திறந்தார். அந்தச் சகோதரனை ஆண்டவர் வெட்கப்பட விடவில்லை.**

**"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;" (ஏசாயா 61:7)** என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் எத்தனை உண்மையுள்ளது பாருங்கள்!

நீங்களும் வெட்கப்பட ஆண்டவர் விட மாட்டார். உங்களுக்கும், வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும்.

ஆனால், கர்த்தர் யாருக்கு வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் தருவார்? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது, நீங்களும் உங்களை அர்ப்பணித்து, இரண்டத்தனையாகப் பலனைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## தேவனுடைய பிள்ளைகள் வெட்கப்பட்டுப் போவதில்லை!

**"...என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை." (யோவேல் 2:26)** என்று கர்த்தர் சொல்கிறார். ஆம், தேவனுடைய பிள்ளையா யிருக்கிற தேவ ஜனங்கள், வெட்கப்பட்டுப் போவதில்லை.

யார் தேவனுடைய பிள்ளைகள்?

**"அவருடைய** (இயேசு கிறிஸ்துவின்) **நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை** (தங்கள் உள்ளத்தில்) **ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." யோவான் 1:12.**

நீங்கள், உங்கள் வாழ்க்கையில் இயேசுவை கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள்

பாவங்களை விட்டு மனந்திரும்பி, 'தேவனுடைய பிள்ளை' என்கிற அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்களா? அப்படியானால், உங்களைக் கர்த்தர் வெட்கப்பட விடமாட்டார். இன்னும் இயேசு கிறிஸ்துவை உங்கள் இருதயத்தில் நீங்கள் ஏற்றுக் கொள்ளாதிருந்தால், இன்று உங்களை இரட்சகர் சந்திக்கிறார்.

இயேசு கிறிஸ்துவை தங்கள் வீட்டில் ஏற்றுக் கொண்ட, '**மார்த்தாள்**', '**மரியாள்**' என்கிற இரு சகோதரிகளுக்கு, '**லாசரு**' என்கிற ஒரு சகோதரன் இருந்தான்.

அவர்கள், 'பெத்தானியா' என்கிற ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம், லாசரு வியாதிப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்தான்.

மார்த்தாளும், மரியாளும் உடனே இயேசு கிறிஸ்துவுக்கு ஆள் அனுப்பினார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவோ உடனே வரவில்லை. மார்த்தாளும், மரியாளும், 'இயேசு கிறிஸ்து வந்து, தங்கள் சகோதரனைக் குணமாக்குவார்' என்று நம்பிக்கையோடு காத்திருந்தார்கள். ஆனால், லாசரு மரித்து, அடக்கம் பண்ணப்பட்ட பிறகுதான், இயேசு கிறிஸ்து வந்தார்.

"இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அந்தக் குடும்பத்திற்கு, அவர் ஏன் அற்புதம் செய்யவில்லை?" என்று ஊர் மக்கள் பேசியிருப்பார்கள். "தன்னை நேசித்த இந்த ஏழை மக்களுக்கு இயேசு கிறிஸ்து உதவி செய்யவில்லையே?" என்று கேள்வி எழும்பியிருப்பார்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்த மார்த்தாளும், மரியாளும் வெட்கப்பட்டு, கலங்கியிருப்பார்கள். என்றாலும், இயேசு கிறிஸ்து வந்தார். மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பினார். தன் பிள்ளைகளை வெட்கப்பட அவர் விடவில்லை. அன்று மாத்திரமல்ல, இன்றும் இயேசு கிறிஸ்து, தன் பிள்ளைகளுக்கு அற்புதம் செய்து, வெட்கத்திற்குப் பதிலாக, இரண்டத்தனையான பலனைத் தருகிறார்.

**எனக்கு ஒரு தாயாரைத் தெரியும். தன் மகளுடைய திருமணக் காரியமாக என்னை ஜெபிக்கச் சொல்வார்கள். அநேக**

**வருடங்களாகப் பிரயாசப்பட்டும், திருமணம் ஒழுங்காகவில்லை. மகளுக்கு வயது ஏறிக் கொண்டேயிருந்தது.**

**வருகிற நண்பர்கள், உறவினர்கள் எல்லாம், "மகளுக்குத் திருமணம் எப்போது?" என்று விசாரிப்பார்கள். அது அவர்களுக்கு மிகுந்த வேதனையாகவும், வெட்கமாகவும் இருந்தது. ஆகவே, தன் மகளை தங்கள் உறவினர் வீடுகளுக்குக்கூட அழைத்துச் செல்ல மிகவும் வெட்கப்பட்டார்கள்.**

**"முப்பது வயதுக்குமேல் இனி உன் மகளை யார் திருமணம் செய்து கொள்வார்கள்?" என்று மற்றவர்கள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், வெட்கத்தில் கலங்கிப் போவார்கள். "நாங்கள் தேவனுடைய பிள்ளையாயிருந்தும், எங்களுக்கு இந்த ஒரு நன்மையான காரியம் நடக்கவில்லையே!" என்று கண்ணீர் வடிப்பார்கள். நான் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, ஜெபித்து அனுப்புவேன்.**

**கர்த்தர், அந்த மகளுக்குத் திருமண காரியத்தை ஒழுங்கு பண்ணிக் கொடுத்தார். ஆசீர்வாதமாய் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. கர்த்தருக்குப் பயந்த, மிகவும் அருமையான ஒரு மருமகனைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார். "இப்படிப்பட்ட ஒரு பையன் இவர்களுக்கு எப்படிக் கிடைத்தான்?" என்று அவர்களுடைய உறவினர்கள் சொல்லும்படியான ஒரு வாழ்க்கையைக் கர்த்தர் அந்த மகளுக்குக் கொடுத்தார்.**

பாருங்கள்! ஆண்டவர், தன் பிள்ளைகளை வெட்கப்பட விடவில்லை. வெட்கத்திற்குப் பதிலாய் இரண்டத்தனையாக அவர்களுக்குப் பலன் வந்தது.

உங்களுக்கும் இயேசு கிறிஸ்து அற்புதம் செய்வார். நீங்கள் அவருடைய பிள்ளையாக இருந்தால், உங்களை வெட்கப்பட விட மாட்டார். உங்கள் வேலையில், படிப்பில், குடும்பத்தில், அவர் அற்புதம் செய்வார். வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாய் உங்களுக்குப் பலன் வரும்.

இயேசுவை கிறிஸ்துவை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். பாவத்தை விட்டு மனந்திரும்பி, அவருடைய பிள்ளையாக மாறி விடுங்கள். தேவனுடைய பிள்ளைகள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

# இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், வெட்கப்பட்டுப் போவதில்லை!

"**அவரை** (இயேசு கிறிஸ்துவை) **விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது." ரோமர் 10:11.**

**"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." எபிரெயர் 11:6.**

**"விசுவாசிக்க வேண்டும்."** இதைக் கர்த்தர் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார். நீங்கள் விசுவாசித்தால்தான், அற்புதங்களை இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் இயேசு கிறிஸ்துவிடமிருந்து எந்த ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானாலும், **விசுவாசிக்க வேண்டும்.**

**"இயேசு கிறிஸ்து, இந்த நன்மையை எனக்குத் தருவார்" என்று விசுவாசிக்க வேண்டும்.** விசுவாசமில்லாமல் எந்த ஒரு நன்மையையும் இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது.

அவர் நம்முடைய **விசுவாசத்தைக் கனப்படுத்துகிற தேவன்!** அவரை விசுவாசிக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதேயில்லை. ஆகவே, உங்கள் விசுவாசத்தை விட்டு விடாதீர்கள். **விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்.**

**எங்களுக்கு, ஊழியத்தில் உதவி செய்கிற ஒரு சகோதரன், அவருடைய நண்பருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு அற்புதத்தை ஆச்சரியத்தோடு இப்படியாகக் கூறினார்: இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அந்த நண்பர், வாழ்க்கையில் மிகுந்த தரித்திரத்தில் கடந்து சென்றார். சாப்பாட்டிற்கே வழியில்லாத நிலையிலும், ஆண்டவர் மீது வைத்திருந்த விசுவாசத்தை அவர் விட்டு விடவில்லை. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு காரியத்திற்கும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அற்புதங்களைக் கண்டார்.**

**ஸ்கூலில் படிக்கிற அவருடைய சிறிய மகனுக்கு, ஒரு இரண்டு ரூபாய் கொடுத்து, ஸ்கூல் பேட்ஜ் (Badge) வாங்கிக் கொடுக்க அவருக்கு வழியில்லை. ஆண்டவரை நோக்கி ஜெபித்தார். "ஆண்டவரே, எலியாவைக் காகத்தைக் கொண்டு போஷித்தீரே, எனக்கும் அப்படி ஒரு அற்புதம் இன்றே செய்யும்" என்று கண்ணீரோடும், விசுவாசத்தோடும் ஜெபித்தார்.**

**என்ன ஆச்சரியம் பாருங்கள்! ஒரு காகம் பறந்து வந்து, எதையோ அவரருகில் போட்டு விட்டுப் போனது. அவர் அதை எடுத்துப் பார்த்தபோது, தன் மகன் படித்துக் கொண்டிருக்கிற அந்த ஸ்கூல் பேட்ஜ். இது அற்புதமல்லவா!**

இது, ஒரு இரண்டு ரூபாய் மதிப்புள்ள ஒரு சின்னக் காரியமாக இருக்கலாம்! என்றாலும், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த அந்தச் சகோதரனுக்கு இது அற்புதமல்லவா! இயேசு கிறிஸ்து தன்னை விசுவாசித்து, ஜெபித்த அந்தச் சகோதரனுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தினார். தன்னை விசுவாசித்த அந்தச் சகோதரனை அவர் வெட்கப்பட விடவில்லை.

ஒரு சின்னக் காரியத்திலும் ஆண்டவர் இவ்வளவு கவனத்தோடு பதில் கொடுப்பாரானால், நீங்கள் விசுவாசத்தோடு கேட்கிற ஒவ்வொரு காரியத்திலும், அவர் அற்புதம் செய்வது எத்தனை நிச்சயம்!

**நீங்களும் இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்!**
**உங்கள் வெற்றிக்காக அவரை விசுவாசியுங்கள்!**
**உங்கள் வேலைக்காக அவரை விசுவாசியுங்கள்!**
**உங்கள் சுகத்திற்காக அவரை விசுவாசியுங்கள்!**
**உங்கள் தேவைகளுக்காக அவரை விசுவாசியுங்கள்!**
**உங்கள் விடுதலைக்காக அவரை விசுவாசியுங்கள்!**
**உங்கள் அற்புதத்திற்காக அவரை விசுவாசியுங்கள்!**
**நீங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!**

விசுவாசத்தோடு ஜெபிக்கிற காரியத்தில் அற்புதங்களைக் காண்பீர்கள். வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும்!

# கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள், வெட்கப்பட்டுப் போவதில்லை!

**"...நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை..." ஏசாயா 49:23.**

மனிதர்களுடைய வார்த்தைகளை நம்பி, மனிதர்களுக்குக் காத்திருக்கிறவர்கள், வெட்கப்பட்டுப் போனதுண்டு. ஆனால், கர்த்தருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவருக்குக் காத்திருந்தோர் வெட்கப்பட்டுப் போனதில்லை.

ஆபிரகாமைக் கர்த்தர் அழைத்தபோது, "உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன்" என்று வாக்குக் கொடுத்தார். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து, ஆபிரகாம் பொறுமையோடு 25 வருடங்கள் காத்திருந்தார். அவருடைய சரீரம் செத்து விட்டது. "இனிக் குழந்தை பிறக்க வழியேயில்லை" என்றாலும், "கர்த்தர், தான் சொன்னபடியே செய்வார்" என்று காத்திருந்தார்.

ஆபிரகாம் வெட்கப்பட்டுப் போகவில்லை. கர்த்தர் அவருடைய 100வது வயதில், ஒரு குழந்தையைக் கொடுத்து, அவருடைய சந்ததியைப் பெருகச் செய்தார். கர்த்தர் அவரை வெட்கப்பட விடவில்லை.

ஆபிரகாமின் தேவன், அவர் நம்முடைய தேவன்! அவர் உங்களுடைய தேவன்! உங்களையும் வெட்கப்பட விட மாட்டார். விசுவாசத்தோடு காத்திருங்கள்! பொறுமையோடு காத்திருங்கள்!

**ஒருமுறை, ஊழியத்திற்காக மும்பைப் பட்டணத்திற்குச் சென்றிருந்தபோது, ஒரு கணவனும், மனைவியும் என்னிடத்தில் ஜெபிக்க வந்திருந்தார்கள். "ஐயா, கர்த்தர் எங்களுக்கு ஒரு குழந்தையை அருளும்படி ஜெபியுங்கள்" என்றார்கள்.**

**"திருமணமாகி எத்தனை வருடங்களாயிற்று?" என்று கேட்டேன். "22 வருடங்களாயிற்று" என்றார்கள். அவர்கள் கர்த்தர் மீது வைத்திருந்த விசுவாசமும், இத்தனை வருடங்களாக இந்த ஆசீர்வாதத்திற்காகக் கர்த்தரை விட்டு விலகாமல் காத்திருந்ததும்,**

**எனக்கு ஆச்சரியமாக இருந்தது. “ஆண்டவரே, உமக்குக் காத்திருந்த இந்தப் பிள்ளைகளை வெட்கப்பட விடாதிரும்” என்று ஜெபித்து அனுப்பினேன்.**

**ஒரு வருடம் கழித்து, மீண்டும் ஒருமுறை ஊழியத்திற்காக மும்பை சென்றிருந்தபோது, அவர்கள் கர்த்தர் கொடுத்த குழந்தையோடு வந்து என்னைச் சந்தித்தார்கள்.**

இயேசு கிறிஸ்து எத்தனை நல்லவர் பாருங்கள்! தனக்குக் காத்திருந்த பிள்ளைகளை வெட்கப்பட விடவில்லை! அற்புதம் செய்து அவர்களை மகிழப் பண்ணினார்.

உங்களையும் வெட்கப்பட விடமாட்டார்! கர்த்தருக்குக் காத்திருங்கள்! விசுவாசத்தோடு காத்திருங்கள்! வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும்.

**“பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை” (ஏசாயா 49:23)**

**“...வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;” (ஏசாயா 61:7)** என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார். இந்த வாக்குத்தத்தம் உங்களுக்குத்தான். விசுவாசத்தோடு இந்த வாக்குத்தத்தத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.




# 6. பயப்படாதே, நான் தகப்பனாயிருக்கிறேன்!

தேவ பக்தியுள்ள ஒரு குடும்பத்தை எனக்குத் தெரியும். தகப்பனார், இயேசு கிறிஸ்துவின் மீது அதிக அன்புள்ளவர். தேவனுடைய ஊழியத்தையும், ஊழியக்காரர்களையும் அதிகமாக நேசிக்கக் கூடியவர். தன்னுடைய குடும்பமும், தனக்குக் கீழ் வேலை செய்கிறவர்களும், ஆண்டவருக்குப் பயந்து வாழ வேண்டும் என்கிற விருப்பமுடையவர்.

திடீரென்று அவர் வியாதிப்பட்டு, மரணத்திற்குச் சமீபமானார். பல தேவ ஊழியர்கள், கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய சுகத்திற்காக ஜெபித்தார்கள். நானும் ஆஸ்பத்திரிக்குச் சென்று, அவருடைய சுகத்திற்காக ஜெபித்தேன். "அவர் சுகம் பெற்று, இன்னும் சில காலம் ஆண்டவருக்குச் சாட்சியாக வாழ வேண்டும்" என்று விரும்பினோம். ஆனால் ஆண்டவரோ, "உலகப் பாடுகள் போதும், இனி என் சமுகத்தில் வந்து இளைப்பாறட்டும்" என்று, அவரைத் தன் இராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொண்டார்.

கண்ணீரில் கலங்கிய அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகளுக்குக் கர்த்தர் ஆறுதலைக் கொடுத்தார். ஆனால், மூத்த மகனுடைய உள்ளமோ ஆறுதலடையவில்லை. "எல்லாப் பொறுப்புகளையும் இளம் வயதிலிருக்கிற என் மீது வைத்து விட்டு, என் தகப்பன் மரித்துப் போனாரே, இந்தப் பெரிய தொழிலை எப்படி நிர்வகிப்பது? தம்பி, தங்கையினுடைய திருமணக் காரியங்களை எப்படி நடத்துவது? இவைகளையெல்லாம் என்னால் செய்து முடிக்க முடியுமா? இவ்வளவு பெரிய பொறுப்பை, என் தகப்பனாரைப்போல என்னால் கவனிக்க முடியுமா?" என்று அவனுடைய உள்ளம் கலங்கிற்று.

ஆண்டவருக்குப் பயந்து வாழ்கிற மகனாக இருந்தும், அவனால் ஆறுதடைய முடியவில்லை. ஒருநாள், அவனுடைய துக்கம் அதிகரித்து, தன் வீட்டில் தனித்திருந்து அழ ஆரம்பித்தான். தன் தகப்பனாரை நினைத்துக் கண்ணீர் வடித்தான். அப்பொழுது, "நீ அழுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

**நீ அழாதே, நான் உனக்குத் தகப்பனாயிருக்கிறேன்." என்கிற ஒரு மெல்லிய சத்தம் அவனுடைய காதில் தொனித்தது.**

**தான் நேசிக்கிற இயேசு கிறிஸ்து, தன்னோடு பேசியதை அவன் உணர்ந்தபோது, அவனுக்குள் விவரிக்க முடியாத சந்தோஷம், சமாதானம் அவனுடைய உள்ளத்தை நிரப்பிற்று. அந்த நாள்முதல், "தகப்பனை இழந்து விட்டோமே!" என்ற துக்கம் அவனை விட்டு ஓடி மறைந்தது. ஒவ்வொரு காரியத்திலும் இயேசு கிறிஸ்து அவனுக்குத் தகப்பனாகவே அவனோடு கூட இருந்து, தன்னை நடத்துவதைக் கண்டு பரவசமடைந்தான்.**

ஆண்டவர் தன்னோடு பேசின விதம், தன்னை நடத்துகிற விதத்தை சமீபத்தில் அந்த சகோதரன் என்னோடு பகிர்ந்து கொண்டபோது, அவர்களுடைய உள்ளத்தில் இயேசு கிறிஸ்து கொடுத்த சமாதானத்தை என்னால் காண முடிந்தது.

**"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." சங். 103:13.**

இன்று நீங்களும் உங்கள் வாழ்க்கையில், "எனக்கு யார் இருக்கிறார்கள்? இந்தக் காரியங்களை எப்படிச் செய்வேன்? என்னால் என்ன செய்ய முடியும்?" என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா?

ஒரு தகப்பனைப்போல் உங்களை வழி நடத்த, இயேசு கிறிஸ்து உங்களுக்கு இருக்கிறார். அவர் உங்கள் மீது அதிக அன்புள்ளவர். உங்களுக்காகத் தன் ஜீவனையே சிலுவையில் கொடுத்தார்.

கர்த்தருக்குப் பயந்து, உங்கள் வழிகளை இயேசு கிறிஸ்துவின் கரத்தில் கொடுப்பீர்களா? ஒரு தகப்பன், தன் குழந்தையைத் தூக்கிச் சுமப்பதுபோல, அவர் உங்களைத் தூக்கிச் சுமப்பார்.

## நீ அனாதை அல்ல!

**ஒருமுறை, ஒரு கிராமத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தேன். இரவுக் கூட்டங்களில் தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டேன். பகலில் நான் தங்கியிருந்த பள்ளிக்கூடத்தில் என்னைச் சந்திக்கும்படியாக ஒரு**

வாலிபன் வந்தான். தன்னுடைய மன பாரத்தை வேதனையோடு இப்படியாக என்னிடத்தில் சொன்னான்:

"ஐயா, நான் குழந்தையாக இருக்கும்போதே, என் தாயார் மரித்து விட்டார்கள். என் உறவினர்கள் எங்களுக்குச் சொந்தமாக இருந்த ஒரு குடிசை வீட்டை, தீயினால் கொளுத்தி, என்னையும் அங்கிருந்து விரட்டி விட்டார்கள். நான் இங்கு வந்து கூலி வேலை செய்துதான் பிழைக்கிறேன். எனக்கு வேறு யாரும் இல்லை. இந்த ஊரிலுள்ள அநேகர் என்னை, 'நீ ஒரு அனாதை' என்று கூறுகிறார்கள். நான் அனாதையா? நீங்கள் சொல்லுங்கள்."

ஒரு சிறு குழந்தையைப்போல கண்ணீரோடு அந்த வாலிபன் கேட்ட கேள்வி, என் உள்ளத்தை உடைத்தது. "அன்பிற்காக ஏங்கி நிற்கும் இந்த வாலிபனுக்கு, என்ன பதில் சொல்வது?" என்று எண்ணிக் கொண்டே, "நீ இயேசு கிறிஸ்துவை உன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறாயா?" என்று அவனிடத்தில் கேட்டேன்.

"ஆம், சில மாதங்களுக்கு முன்பாகத்தான் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை என் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டேன்" என்றான். அப்படியானால், "நீ அனாதை அல்ல."

**"அவருடைய** (இயேசு கிறிஸ்துவின்) **நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." யோவான் 1:12.**

"இயேசு கிறிஸ்துவை உன் உள்ளத்தில் நீ ஏற்றுக் கொண்டபடியினால், நீ தேவனுடைய பிள்ளையா யிருக்கிறாய். இந்த உலகத்தை உண்டாக்கின கர்த்தர், உனக்குத் தகப்பனாயிருக்கிறார்" என்று நான் அவனுக்கு விளக்கிச் சொல்லச் சொல்ல, அந்த வாலிபனுடைய முகம் மலர்ந்தது.

**"நான் அனாதை அல்ல... நான் அனாதை அல்ல."** என்று, ஒரு சிறு பிள்ளையைப்போல அந்த வாலிபன் சத்தமிட்டுச் சொன்னான். அவனுடைய உள்ளத்தில்தான் எத்தனை பெரிய சந்தோஷம்! இன்று நீங்களும், உங்கள் வாழ்க்கையில் தாய்–தகப்பனை இழந்து, தாயினுடைய அன்பிற்காக... தகப்பனுடைய பாசத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறீர்களா?

**“ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.”(ஏசாயா 49:15)** என்று, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பார்த்துச் சொல்கிறார். ஒரு தாய், ஒருவேளை தன் பிள்ளையைக்கூட மறந்து விடக் கூடும். ஆனால், இயேசு கிறிஸ்து தன்னை ஏற்றுக் கொண்ட தன் பிள்ளைகளை மறக்கவே மாட்டார்.

தேவப் பிள்ளைகளே, நீங்கள் **கலங்காதீர்கள்!** இயேசு கிறிஸ்து உங்களுக்குத் தாயாய் இருந்து, உங்களை அரவணைத்துக் கொள்வார். தகப்பனாயிருந்து உங்களுக்காக எல்லாவற்றையும் செய்வார்.

## இயேசு, உன்னை நேசிக்கிறார்!

ஒரு நாள், ஒரு பஸ் நிலையத்தில் பஸ்ஸூக்காக நான் காத்திருந்தேன். ஒரு தகப்பனார் வந்து, “ஒரு பத்துப் பைசா இருந்தால் தாருங்கள்” என்று கேட்டார். அவரைப் பார்த்தால், ஒரு பிச்சைக்காரனாகத் தெரியவில்லை. அவரோடு பேச, ஆவியானவர் என் உள்ளத்தை ஏவினார்.

“பத்து பைசா உங்களுக்கு எதற்கு?”

“ஒரு கொடிய வியாதி, என் சரீரத்தைத் தாக்கி இருக்கிறது. அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போய் கொண்டிருக்கிறேன். பஸ்ஸூக்குப் பணம் இல்லை” என்று பரிதாபமாகச் சொன்னார்.

அவருடைய சரீரமெல்லாம் வீங்கி, பெலவீனப்பட்டு, நிற்கக்கூட முடியாதபடி அவர் வேதனைப் படுவதைக் கண்டேன். “உங்களுக்கு உதவி செய்ய, உங்கள் வீட்டில் யாரும் இல்லையா?” என்று கேட்டேன்.

“இருக்கிறார்கள், என் பிள்ளைகள் எஸ்டேட்டில் நல்ல வேலையில் இருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கவனிப்பதே இல்லை. என் மனைவியும், பிள்ளைகளோடு போய் சேர்ந்து கொண்டாள். அவளும் என்னை நேசிப்பதில்லை. உறவினர்களில் ஒருவரும் என்னை ஏற்றுக் கொள்வதில்லை. ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். அங்கும் என்னை ஏற்றுக் கொள்ளா விட்டால்,

எங்காவது விழுந்து சாக வேண்டியதுதான்" என்று, தன்னுடைய கைவிடப்பட்ட நிலையைக் கூறினார்.

அவர் இப்படி என்னோடு பேசிக் கொண்டிருக்கும் போதே, அவருடைய வாழ்க்கையின் இரகசியங்களை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார். உடனே நான் அவரிடத்தில், "நீங்கள் இப்படிப்பட்ட பாவ வாழ்க்கை வாழ்ந்ததுண்டா? உங்கள் நிமித்தம், உங்கள் குடும்பம் இவ்விதமாகக் கஷ்டப்பட்டதுண்டா?" என்று கேட்டபோது, ஆச்சரியத்தோடு என்னை நோக்கிப் பார்த்தார்.

தன் பாவ வாழ்க்கையை ஒத்துக் கொண்டார். "என் பாவ வாழ்க்கையினால்தான், என் குடும்பமே என்னை வெறுத்து விட்டது" என்றார்.

"உங்கள் பாவ வாழ்க்கையின் நிமித்தம், உங்கள் மனைவி உங்களை வெறுத்து விட்டார்கள். உங்கள் பிள்ளைகளும் உங்களை மறந்து விட்டார்கள். உங்கள் உறவினர்களும் உங்களைப் புறக்கணித்து விட்டார்கள். ஆனால், இந்த நிலையிலும் உங்களை நேசிக்க ஒருவருண்டு" என்று நான் கூறியவுடன், அந்த இந்துத் தகப்பனாரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. பாவிகள் மீது இயேசு கிறிஸ்து வைத்திருக்கும் அன்பை, பாவிகளை இரட்சிக்க சிலுவையில் அவர் பட்ட பாடுகளை விவரித்துச் சொல்லச் சொல்ல, அவருடைய உள்ளத்தை இயேசு கிறிஸ்துவின் அன்பு தொட்டது.

**"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்..." 1 தீமோ. 1:15.**

**"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ரோமர் 5:8.**

ஆம். பாவிகளை அழிக்கும்படியாக அல்ல! பாவிகளை நேசித்து, அவர்களுடைய பாவ வாழ்க்கையிலிருந்து அவர்களை இரட்சிக்கும்படியாகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார். சிலுவையில் மரித்தார்.

நண்பரே, உங்கள் பாவத்தினிமித்தம் எல்லோராலும் நீங்கள் பகைக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டுத் தனித்து நிற்கிறீர்களா?

**கலங்காதீர்கள்!** இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார்.

உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையைக் கொடுக்க அவர் விரும்புகிறார்.

**"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." நீதி. 28:13.**

**"...இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." 1 யோவான் 1:7.**

தாயை இழந்து, தகப்பனைப் பறி கொடுத்துத் தவிக்கிறீர்களோ? பாவத்தினிமித்தம் எல்லோராலும் புறக்கணிக்கப் படுகிறீர்களோ?

இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார். அவரண்டை வாருங்கள்! அவர் உங்களைச் சேர்த்துக் கொள்வார். உங்கள் பாவங்களையெல்லாம் மன்னிப்பார். பாசமுள்ள ஒரு தாயைப்போல, அவர் உங்களை அணைத்துக் கொள்வார். கரிசனையுள்ள ஒரு தகப்பனைப்போல உங்களை அவர் வழி நடத்துவார்.

உங்கள் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவினுடைய கரத்தில் கொடுப்பீர்களா? இன்றே, இப்பொழுதே, உங்கள் உள்ளத்தில் ஒரு மாற்றத்தைக் காண்பீர்கள்.




# 7. பயப்படாதீர்கள், இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்கப் போகிறார்!

**வியாதி!**

வேதனையுள்ளது! கொடூரமானது! ஆத்தும மகிழ்ச்சியைக் கெடுப்பது! குடும்ப சந்தோஷத்தை அழிப்பது!

**வியாதிப் படுக்கை!**

ஒரு மனிதனுக்கு அதிக வேதனையைக் கொடுக்கிறது! "ஏன் எனக்கு இந்த வியாதி வந்தது? எப்பொழுது இது சுகமாகும்?" என்று, அவனுடைய உள்ளம் சுகத்திற்காக ஏங்குகிறது.

17 வயது நிரம்பிய ஒரு வாலிபன், வியாதிப்பட்டான். அவனுடைய இரண்டு நுரையீரல்களும் T.B. வியாதியினால் பாதிக்கப்பட்டு, அவனுடைய மரண நாளுக்குரிய தேதியை டாக்டர்கள் குறித்து விட்டார்கள். ஒரு போதகருடைய மகனாகிய அவனைப் பார்க்க, தினமும் ஊழியர்களும், விசுவாசிகளும் வந்து கொண்டிருந்தார்கள்.

அப்படி வருகிறவர்கள், எலும்பும், தோலுமாக மூச்சு விடுவதற்குக்கூட முடியாத நிலையில் படுத்திருந்த அவனைப் பார்த்து, "தம்பி, இன்னும் சில நாட்களில் நீ மரிக்கப் போகிறாய். இப்பொழுதாவது மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை நீ ஏற்றுக் கொள். உன் பாவங்களை அறிக்கை யிடு. மரித்ததும், மோட்சத்திற்குச் செல்லலாம்" என்று சொன்னார்கள். அவனுடைய இருதயம் சோர்ந்து போயிற்று.

அதற்கு அவன், "**நான் மோட்சம் செல்லவும் விரும்பவில்லை. நரகம் செல்லவும் விரும்பவில்லை. நான் வாழ விரும்புகிறேன்**" என்று சொல்வான்.

அதன் பிறகு யாராவது தன்னைப் பார்க்க வந்தால், சுவர் புறமாகத் திரும்பிப் படுத்துக் கொள்வான். மனிதர்களுடைய வார்த்தைகள் அவனைக் கலங்கப் பண்ணிற்று.

வியாதிப் படுக்கையில் கிடக்கிற ஒரு மனிதனைப் பார்த்து; "நீ மோட்சம் செல்ல வேண்டும்" என்று கூறுவது சுலபமான காரியம். ஆனால், அவனுடைய உள்ளத்தின் வேதனைகளை யாரால் புரிந்து கொள்ள முடியும்?

என்னுடைய 14வது வயதில், நான் வியாதிப்பட்டு, டாக்டர்களால் கைவிடப்பட்டு, மரணப் படுக்கையில் கிடந்தேன். அன்று நான் அனுபவித்த வேதனைகள், இன்று வியாதிப் படுக்கையில் கஷ்டப்படும் மக்களின் வேதனைகளை என்னால் புரிந்து கொள்ளச் செய்கிறது.

**இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கப் போகிறார்!**

அந்த வாலிபனுடைய உள்ளம், சுகத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தது. "என்றைக்கு என்னுடைய இந்த வியாதிப் படுக்கை மாறும்? 'ஆண்டவர்' என்று ஒருவர் இருந்தால், ஏன் எனக்கு இப்படிச் சம்பவிக்க வேண்டும்? அவருக்கு இரக்கம் இல்லையா?" என்று, அவனுடைய வாழ்க்கை அவனுக்குக் கசந்து விட்டது.

ஒருநாள், பக்கத்துப் பட்டணத்திலிருந்து அவனைப் பார்க்க வந்த அவனுடைய சகோதரி, அவன் இருந்த அறைக்குள் பிரவேசித்து, அவனைப் பார்த்து; "**தம்பி, இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கப் போகிறார்**" என்று சொன்னாள்.

அந்த வார்த்தை அவனுடைய இருதயத்தைத் தொட்டது. ஒரு புதிய நம்பிக்கை அவனுடைய உள்ளத்தில் எழுந்தது. அவன் சொன்னான், "அக்கா, நீ என்ன சொன்னாய்? இன்னொரு முறை அந்த வார்த்தையைச் சொல். இதற்காகத்தான் என் இருதயம் ஏங்கிக் கொண்டிருக்கிறது."

அவள் சொன்னாள்;

**"இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கப் போகிறார்."**

**"இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கப் போகிறார்."**

**"இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கப் போகிறார்."**

இந்த வார்த்தையை அவன் கேட்டவுடன், தன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். அவனுடைய இருதயத்தில் மகிழ்ச்சியும், தேவனைக் குறித்த விசுவாசமும் உண்டானது. வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிற ஒரு

ஊழியர் நடத்திக் கொண்டிருந்த கூட்டத்திற்கு, அவனுடைய சகோதரி அவனை அழைத்துச் சென்றாள். இயேசு கிறிஸ்துவின் வல்லமை அவனைத் தொட்டது. அற்புதமாக அவன் சுகமாக்கப்பட்டான்.

ஆண்டவரிடத்திலிருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொண்ட அந்த வாலிபன், இன்றைக்கு, வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிற, இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராக, தன் வயதான காலத்திலும் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டு வருகிறார்.

நண்பரே, இன்று நீங்கள் வியாதிப் படுக்கையில் கிடந்து வேதனைப் படுகிறீர்களோ? "ஆண்டவர் என்னை ஏன் படைத்தார்? ஆண்டவருக்கு இரக்கமில்லையா?" என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, உள்ளத்தில் கலங்குகிறீர்களோ?

**"பயப்படாதீர்கள்! இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்கப் போகிறார்."**

## மனிதரின் வார்த்தைகள்!

**"அவன் எப்பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுது அழியும்? என்று, என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறார்கள். ஒருவன் என்னைப் பார்க்கவந்தால், வஞ்சனையாய்ப் பேசுகிறான்; அவன் தன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக்கொண்டு, தெருவிலே போய் அதைத் தூற்றுகிறான்.**

**என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருந்து, எனக்குப் பொல்லாங்கு நினைத்து, தீராவியாதி அவனைப் பிடித்துக் கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள்.**

**என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்." சங். 41:5-9.**

இன்று, நீங்களும் இப்படிப்பட்ட நெருக்கங்களில் தவிக்கிறீர்களோ? ஒருபக்கம், வியாதியினால் சரீரத்தில்

ஏற்படும் வேதனை! மற்றொரு பக்கம், மனுஷர் பேசும் வார்த்தைகளினால், ஆத்துமாவில் ஏற்படும் வேதனை! இரண்டுக்கும் நடுவில், “நான் எப்பொழுது சாவேன்?” என்று மனதில் ஏற்படும் கசப்பு!

நான் வியாதிப் படுக்கையில் கைவிடப்பட்டவனாக இருக்கும்போது, என்னைப் பார்க்கும்படியாக என் உறவினர்களும், நண்பர்களும் வந்தார்கள். ஒருவராவது, ஆறுதலான, நம்பிக்கையான வார்த்தைகளைப் பேசவில்லை. “இனிமேல் இவன் நடக்க முடியாது. இவன் எங்கே பிழைக்கப் போகிறான்? மரித்தாலும் மரித்து விடுவான்” என்றுதான் பேசினார்கள். இது, நம் உள்ளத்திற்கு எத்தனை வேதனை தரக்கூடிய காரியம்?

இன்று நீங்களும், உங்கள் சத்துருக்களால் தூஷிக்கப்பட்டு, உறவினர்களாலும், நண்பர்களாலும் புறக்கணிக்கப்பட்டு, உங்கள் சொந்தக் குடும்பத்தாரால் ஒதுக்கப்படுகிற நிலையில் வந்திருக்கிறீர்களோ?

**பயப்படாதீர்கள்!** உங்கள் மீது பாசமுள்ள, அன்புள்ள ஒரு நேசர் உண்டு! உங்கள் மீது அக்கறையுள்ள இயேசு கிறிஸ்து உங்களுக்கு உண்டு!

## இயேசு கிறிஸ்துவின் மனதுருக்கம்!

உங்கள் வியாதிப் படுக்கையையும், வேதனைகளையும் கண்டு, ஒருவரும் உங்கள் மீது இரக்கப்படவில்லையா? **கலங்காதீர்கள்.** உங்களைச் சிருஷ்டித்த தேவன், உங்கள் மீது மிகுந்த இரக்கமுள்ளவர்.

பரலோகத்தின் தேவன், மனிதனாய், “**இயேசு**” என்ற பெயரில், இந்த உலகத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது, **“இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.” மத்தேயு 14:14.**

**இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: அவனைச் சுத்தமாக்கினார் (மாற்கு 1:40-42).**

38 ஆண்டு காலம் ஒரு மனுஷன் வியாதிப்பட்டு, பெதஸ்தா குளத்தினருகே படுத்திருந்தான். அவனைப் பார்த்து விசாரிக்கவோ, ஆறுதல் சொல்லவோ ஒருவரும் வரவில்லை. மனமுடைந்து போய், “எனக்கு ஒரு சாவு வராதா?” என பாரத்தோடு படுத்திருந்த அவனை, **இயேசு கிறிஸ்து தேடிப் போனார். அவன் இயேசு கிறிஸ்துவைத் தேடி வரவில்லை. ஆனால், இயேசு கிறிஸ்து அவனைத் தேடிப் போனார்.**

இயேசு கிறிஸ்து அவனைப் பார்த்து, அன்போடுகூட; “**சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?**” என்று கேட்டார். இயேசு கிறிஸ்து கேட்ட அந்த வார்த்தை, அவனுடைய உள்ளத்தில் எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும்! ஆம். இயேசு கிறிஸ்து, அவனுடைய வியாதிப் படுக்கையை மாற்றினார். அற்புதமாக அவனை சுகமாக்கினார்.

இன்றைக்கு நீங்களும்கூட வியாதிப் படுக்கையில் இருக்கிறீர்களா? உங்கள் வியாதிப் படுக்கையை மாற்றுவதற்காக, உங்களுக்கு ஒரு அற்புதத்தைச் செய்வதற்காக, **இப்பொழுது இயேசு கிறிஸ்து, உங்கள் வியாதிப் படுக்கையினருகில் வந்திருக்கிறார்.**

நான் வியாதிப் படுக்கையில் மரணத் தருவாயில் போராடிக் கொண்டிருந்தபோது, **இயேசு கிறிஸ்து என்னைத் தேடி வந்தார்.** நான் இயேசு கிறிஸ்துவைத் தேடிச் செல்லவில்லை. அந்நாட்களில், நான் இயேசு கிறிஸ்துவைப் புறக்கணித்தவன். நான் இந்துவாக இருந்தபடியினால், இயேசு கிறிஸ்துவை தெய்வமாகக் கருதவில்லை. அவரை கேலியாகப் பேசியவன், என் வாய்க்கு வந்தபடி அவரைத் தூஷித்தவன்.

ஆனாலும், இயேசு கிறிஸ்து என்னை வெறுக்கவில்லை. என்னைப் புறக்கணிக்கவில்லை. என்னைத் தேடி வந்தார். ஆம். அவரைத் தூஷித்துத் திரிந்த என்னை இயேசு கிறிஸ்து தேடி வந்தார். என் வேதனையைக் கண்டு, எனக்கு இரங்கினார். ஒரு சில நிமிடத்தில் அற்புதமான சுகத்தை எனக்குக் கொடுத்தார். என்னைப் பார்க்க வந்த ஒரு கிறிஸ்தவ சகோதரன் எனக்காக

ஆவியோடும், கண்ணீரோடும் ஜெபித்தார். ஜெபித்துக் கொண்டிருந்தபோதே, தேவ வல்லமை என் சரீரத்தில் இறங்கிற்று. இயேசு கிறிஸ்து என்னைச் சுகமாக்கினார்.

இந்த மாறாத இயேசு கிறிஸ்து, இன்று, இப்பொழுது, உங்களுக்கு அருகில் இருக்கிறார். அன்பில் மாறாதவர்! இரக்கத்தில் மாறாதவர்! வல்லமையில் மாறாதவர்! இப்பொழுது உங்கள் அருகில் நிற்கிறார்! உங்களைச் சுகமாக்க, உங்கள் வியாதிப் படுக்கையை மாற்ற!

## வியாதிப் படுக்கையை மாற்றுவார்!

**“படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்.” சங். 41:3.**

இயேசு கிறிஸ்து, பேதுருவின் வீட்டிற்குள் பிரவேசித்தபோது, அவருடைய மாமி ஜுரமாய் கிடக்கிறதைக் கண்டார். இயேசு கிறிஸ்து அவள் கையைத் தொட்டு, அவளைச் சுகமாக்கி, வியாதிப் படுக்கையை மாற்றினார் **(மத்தேயு 8:14,15).**

படுக்கையிலே கிடந்த திமிர்வாதக்காரனை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தார்கள். இயேசு கிறிஸ்து அவனைச் சுகமாக்கி, அவனுடைய வியாதிப் படுக்கையை மாற்றினார் **(மத்தேயு 8:14,15).**

இயேசு கிறிஸ்து, யவீருவின் வீட்டிற்குள் பிரவேசித்து, மரித்துப் போன அவனுடைய மகளைத் தொட்டு, அவளுடைய மரணப் படுக்கையை மாற்றினார் **(லூக்கா 8:51-55).**

இயேசு கிறிஸ்து, பெதஸ்தா குளத்தினருகே மரணப் படுக்கையில் கிடந்த ஒரு மனிதனைச் சந்தித்து, அவனைச் சுகமாக்கி, 38 வருடங்களாயிருந்த அவனுடைய வியாதிப் படுக்கையை ஒரு நொடியில் மாற்றினார் **(யோவான் 5:1-14).**

அதே இயேசு கிறிஸ்து, உங்களைச் சுகமாக்க, உங்கள் வியாதிப் படுக்கையை மாற்ற. இன்று உங்கள்

படுக்கையினருகே வந்து நிற்கிறார். இப்பொழுது அவர், உங்கள் வியாதிப் படுக்கையை மாற்றப் போகிறார்.

**என் வியாதிப் படுக்கையை மாற்றினவர், உங்கள் வியாதிப் படுக்கையையும் கட்டாயம் மாற்றுவார்.**

ஆனால் அதற்கு முன்பாக, இந்த ஜெபத்தை முழு இருதயத்தோடு செய்யுங்கள்.

**"கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவைக்குணமாக்கும்..." (சங். 41:4)**

என்று, உங்கள் ஆத்துமாவில் சந்தோஷத்தை, பாவ மன்னிப்பை நீங்கள் உணரும் வரை, மறுபடியும் மறுபடியும் இந்த ஜெபத்தைச் செய்யுங்கள்.

**"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." நீதி. 28:13.**

**"...இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." 1 யோவான் 1:7.**

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுமேயானால், இயேசு கிறிஸ்து உங்களைச் சுகமாக்க, எந்தத் தடங்கலும் இருக்க முடியாது.




# 8. பயப்படாதீர்கள், கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்!

"யார் எனக்கு உதவி செய்வார்கள்? இந்தத் தேவைக்காக நான் யாரிடத்தில் போவேன்? எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையே? என் வேலைக் காரியமாக, யார் எனக்கு ஒத்தாசை செய்வார்கள்? இந்தக் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ஒரு வழியும் இல்லையே! யார் என் தேவைகளைச் சந்திப்பார்கள்?

இந்த வியாதிப் படுக்கை மாறுமா? யார் என்னைக் குணமாக்குவார்கள்? இந்தப் பிரச்சனையிலிருந்து வெளி வர, யார் எனக்கு ஒத்தாசை செய்வார்கள்?" என்று,

இப்படி, ஏதோ ஒரு காரியமாகக் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா?

**கலங்காதீர்கள்!**
**உங்களுக்கு ஒத்தாசை வரும்!**
**கர்த்தரிடத்திலிருந்து,**
**உங்களுக்கு ஒத்தாசை வரும்!**

**பள்ளிக்கூடத்திலே படித்துக் கொண்டிருக்கிற ஒரு ஏழைச் சிறுவன், ஒரு சமயம், தனக்கு நடந்த ஒரு சம்பவத்தை இப்படியாக என்னிடத்தில் சொன்னான்:**

**முழு ஆண்டுப் பரீட்சைக்காகக் காலையில் புறப்பட்டுக் கொண்டிருந்தான். பரீட்சை எழுதுவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். பரீட்சை எழுதுவதற்கு, தான் பயன்படுத்தப் போகும் பேனாவை எடுத்து ஆயத்தப்படுத்தினான். அப்பொழுதுதான், பேனாவில் இருந்த மை கசிந்து கொண்டிருந்ததை அவன் கவனித்தான்.**

**துடைத்துத் துடைத்துப் பார்த்தான். என்றாலும், மை கசிந்து கொண்டே இருந்தது. அதை வைத்துப் பரீட்சை எழுத முடியாது என்பதை அவன் அறிந்து கொண்டான். புதுப் பேனா வாங்குவதற்கும் வழி இல்லை. தகப்பனில்லாத அவனை, அவனுடைய ஏழைத் தாய் கஷ்டப்பட்டு, அவனைப் படிக்க வைத்துக்**

**கொண்டிருந்தார்கள். உடனே அவனுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் ஞாபகத்தில் வந்தார். "தகப்பனுடைய உதவி இல்லாத எனக்கு, இயேசுவே, நீர்தான் தகப்பன். வேறு யாரிடத்தில் நான் போய் உதவி கேட்க முடியும்? இயேசுவே, எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபித்து விட்டு, பரீட்சைக்குப் புறப்பட்டுப் போனான்.**

**போகிற வழியில் ஒரு இரயில்வே கிராஸிங்கைக் கடந்து செல்ல வேண்டியதிருந்தது. அதைக் கடந்து சென்று கொண்டிருந்த போது, அழகிய புதுப் பேனா ஒன்று அங்கே கிடப்பதைக் கண்டான். அதை எடுத்துப் பார்த்தான். அழகான பேனா! சுற்றும் முற்றும் பார்த்தான். அதை உரிமை கொண்டாட யாருமில்லை.**

**"ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்டு, எனக்கு ஒத்தாசை அனுப்பியிருக்கிறார்" என்று, தனக்கு உதவி செய்த ஆண்டவரைத் துதித்துக் கொண்டே, பரீட்சை எழுதச் சென்றான். பாருங்கள், சரியான நேரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவனுக்கு உதவி செய்தார்.**

**உங்களுக்கும் கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்!**

"இது ஒரு சின்னக் காரியம் தானே!" என்று ஒருவேளை நாம் நினைக்கலாம். ஆனால், அந்தச் சூழ்நிலையில் அந்தச் சிறுவனுக்கு அது ஒரு பெரிய காரியம். "ஆண்டவர், எனக்கு அற்புதமாக உதவி செய்தார்" என்று, மகிழ்ச்சியோடு எல்லோரிடமும் கூறினான்.

ஒரு சின்னக் காரியத்தில் இவ்வளவு அக்கறையோடு உதவி செய்த ஆண்டவர், பெரிய காரியத்தில் உதவி செய்வது எத்தனை நிச்சயம்!

உங்கள் கடன் பிரச்சனை மாற, தேவைகள் சந்திக்கப்பட, **கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்!**

உங்கள் வியாதிப் படுக்கை மாற, உபத்திரவங்கள் நீங்க, **கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்!**

உங்கள் வேலைக்காக, தொழிலுக்காக, பிள்ளைகள் காரியத்திற்காகக் **கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்!**

**கலங்காதீர்கள்!** சரியான நேரத்தில் ஒத்தாசை வரும்! கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசை வர வேண்டுமானால், நீங்கள் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு.

# கர்த்தருக்கு நேராக உங்கள் கண்களை ஏறெடுங்கள்!

**"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்." சங். 121:1.**

என்பதே, உங்கள் அனுபவமாய் இருக்கட்டும். "எனக்கு உதவி வரும் பர்வதமாகிய கர்த்தருக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்" என்பதே, இதனுடைய அர்த்தம்!

உதவிக்காக மனிதர்களை நோக்கிப் பார்த்து, நோக்கிப் பார்த்து, நீங்கள் சோர்ந்து போயிருக்கலாம்! "உதவி செய்கிறேன்" என்று வாக்குக் கொடுத்த மனிதர்களால் நீங்கள் ஏமாற்றப்பட்டு, கலங்கி நிற்கலாம்!

**கலங்காதீர்கள்,** உங்களை ஏமாற்றாத ஒருவர் உண்டு! அவர் உங்களுக்கு உதவி செய்ய ஆவலாயிருக்கிறார்! அவர்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து! அவருக்கு நேராக உங்கள் கண்களை ஏறெடுங்கள். அவரை நோக்கிப் பார்த்த ஒருவரும் வெட்கப்பட்டுப் போனதில்லை.

**'ஜார்ஜ் முல்லர்' என்கிற ஒரு தேவ மனிதர், ஆயிரக்கணக்காக அனாதைப் பிள்ளைகளை தன் விடுதியில் வைத்துப் பராமரித்து வந்தார். அந்தப் பிள்ளைகளுடைய தேவைகளுக்காக, எந்த மனிதரிடத்திலும் போய், அவர் நன்கொடைகள் வாங்குவதில்லை. அந்த விடுதியை ஆரம்பிக்கும் போதே, கர்த்தரைச் சார்ந்து, கர்த்தரை நம்பியே ஆரம்பித்தார். என்ன தேவை என்றாலும், கர்த்தரை நோக்கிக் கண்களை ஏறெடுப்பார். அற்புதமாகத் தேவைகள் சந்திக்கப்படும்.**

**ஒருநாள் காலை வேளையில், அந்த தேவ மனிதரைத் தேடி வந்த ஒரு நண்பர், "யாரிடத்திலும் எந்தவிதமான உதவியும் கேட்காமலே எப்படி இந்த விடுதியை நீங்கள் பராமரிக்கிறீர்கள்?" என்று ஆச்சரியமாகக் கேட்டார். அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, விடுதிக் காப்பாளர் வந்து, ஜார்ஜ் முல்லரைப் பார்த்து; "ஐயா, இன்று காலை உணவுக்குப் பிள்ளைகளுக்கு ஒன்றுமில்லை, என்ன செய்வது?" என்றார்.**

"நீ போய் சாப்பாட்டு மேஜையை ஆயத்தப்படுத்து, நான் போய் ஜெபிக்கிறேன்" என்று சொல்லி, தன் நண்பரை அங்கே உட்கார வைத்து விட்டு, ஒரு அறைக்குள்ளே போய் ஜெபித்தார். சில நிமிடங்கள் ஜெபித்து விட்டு வந்து, தன் நண்பரைப் பார்த்து, "வாருங்கள், ஆண்டவர் எப்படி உதவி செய்கிறார் என்று பார்க்கலாம்!" என்று சொல்லி, அவரையும் கூடவே அழைத்துச் சென்றார்.

சாப்பாட்டு அறைக்குச் சென்றபோது, பிள்ளைகள் எல்லோரும் சாப்பாட்டு மேஜையில் வந்து அமர்ந்தார்கள். தட்டுகளெல்லாம் அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டது. "ஆண்டவர் கொடுத்த இந்தக் காலை ஆகாரத்திற்காக ஆண்டவரைத் துதித்து ஜெபிப்போம்" என்று சொன்னபோது, பிள்ளைகள் எழுந்து நின்று, வழக்கத்தின்படி ஒரு துதிப் பாடலைப் பாடினார்கள்.

பிள்ளைகள் பாடிக் கொண்டிருக்கும் போது, வெளியே பெரிய வேன் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஒரு மனிதன் இறங்கி வந்து, அவரிடத்தில், "ஜார்ஜ் முல்லரைப் பார்க்க வேண்டும்" என்றான். "நான் தான் ஜார்ஜ் முல்லர்" என்று சொன்னபோது; "ஐயா, நான் ரொட்டிகள் தயாரித்து விற்கும் பேக்கரி வைத்திருக்கிறேன். நேற்று இரவு நான் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னை எழுப்பி, குறிப்பிட்ட ரொட்டிகளைத் தயாரித்து, இந்த விடுதியிலுள்ள ஜார்ஜ் முல்லரிடம் கொடுக்கும்படிக்கு எனக்குக் கட்டளையிட்டார்.

உடனே நான் எழும்பி, இரவோடு இரவாக இந்த ரொட்டிகளைத் தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லி, வேனில் இருந்த ரொட்டிகளைக் காண்பித்தான். பிள்ளைகளுக்கு சாப்பிட ரொட்டிகள் வழங்கப்பட்டது.

பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே ஒரு மனிதன் வந்து, "இந்த விடுதிக்குத் தலைவர் யார்?" என்று விசாரித்தான். அவனை ஜார்ஜ் முல்லரிடம் அழைத்து வந்தபோது, "ஐயா, நான் பால் வாகனத்தின் டிரைவர். பக்கத்துப் பட்டணத்திற்கு வாகனத்தில் பால் கொண்டு சென்று கொண்டிருந்தேன். திடீரென்று உங்கள் விடுதிக்கு முன்பாக என் வாகனம் பழுதாகி நின்று விட்டது. அதைச் சரி செய்ய எவ்வளவோ பிரயாசப்பட்டேன், அதைச் சரிப்படுத்த முடியவில்லை.

**மெக்கானிக் வந்து அதைச் சரிப்படுத்த பலமணி நேரங்கள் ஆகும். அதற்குள் பால் கெட்டு வீணாகி விடும். இங்கு ஒரு விடுதி இருப்பதைப் பார்த்தேன். நீங்கள் இந்தப் பாலை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று எல்லாப் பாலையும் கொடுத்து விட்டுப் போனான். பிள்ளைகள் ரொட்டியைச் சாப்பிட்டு முடிப்பதற்குள், அவர்களுக்குப் பால் வழங்கப்பட்டது.**

**"இப்படித்தான் ஆண்டவர் ஒவ்வொரு நாளும், ஏற்ற நேரத்தில் உதவி செய்து வருகிறார்" என்று ஜார்ஜ் முல்லர் சொன்னபோது, அந்த நண்பர் ஆச்சரியப்பட்டுப் போனார்.**

ஜார்ஜ் முல்லருக்கு உதவி செய்த ஆண்டவர், உங்களுக்கும் உதவி செய்வார். உங்கள் கண்களைக் கர்த்தருக்கு நேராக ஏறெடுங்கள். உங்கள் தேவைக்காக அவரை நோக்கி ஜெபியுங்கள்.

**"பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.**

**இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது."(சங். 123:1,2)** என்று ஜெபியுங்கள்.

கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசை வரும்.

## விசுவாசியுங்கள்!

"கர்த்தருக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்" என்று சொன்ன, பக்தனாகிய தாவீது சொல்கிறார்; **"வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்." சங். 121:2.**

"கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்!"

இதுவே அவருடைய விசுவாசம். நாம் கர்த்தரை நோக்கிப் பார்த்தாலும், "அவரிடத்திலிருந்து உதவி வரும்" என்று விசுவாசிக்கும்போதுதான், அற்புதங்களைக் காண முடியும்.

"உங்களுக்கும் கர்த்தரிடத்திலிருந்து உதவி வரும்" என்று **விசுவாசியுங்கள்.**

ஒருமுறை, ஜார்ஜ் முல்லர் தனது வயதான காலத்தில், ஒரு பட்டணத்தில் ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் பிரசங்கம் செய்வதற்காக, ஒரு கப்பலில் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று நடுக் கடலில் கப்பல் நின்று விட்டது.

ஜார்ஜ் முல்லர், அந்தக் கப்பல் மாலுமியிடம் காரியத்தை விசாரித்தார். "கடலில் பனிப் பாறைகள் சூழ்ந்திருக்கிறது. இதற்கு மேல் கப்பலைச் செலுத்த முடியாது. பனிப் பாறைகள் விலகின பிறகுதான், கப்பலைச் செலுத்த முடியும்" என்றார் மாலுமி.

"எப்பொழுது பனிப் பாறைகள் விலகும்?" என்று ஜார்ஜ் முல்லர் அவனிடத்தில் கேட்டபோது, "ஒரே நாளில் விலகலாம், சில சமயம் ஒரு வாரமும் ஆகலாம், எப்படியும் சில நாட்கள் இங்குதான் இருக்க வேண்டியதிருக்கும்" என்று அந்த மாலுமி கூறினார்.

"இல்லை, நான் உடனே போயாக வேண்டும். எனக்காகக் கூட்டங்களெல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விளம்பரங்கள் எல்லாம் செய்யப்பட்டு விட்டது" என்று ஜார்ஜ் முல்லர் சொன்னபோது, "நீங்கள் சொல்கிற நாட்களுக்குள் போகவே முடியாது. சூழ்ந்திருக்கும் பனிப் பாறைகளைப் பார்த்தால், நாம் இங்கிருந்து புறப்படவே பல நாட்கள் ஆகி விடும்" என்றார் மாலுமி.

ஜார்ஜ் முல்லர் உடனே, "நாம் ஜெபிக்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அற்புதம் செய்வார். என்னுடைய இத்தனை ஆண்டு கால ஊழியத்தில் இயேசு கிறிஸ்து என்னை வெட்கப்பட விட்டதில்லை" என்றார்.

அந்தக் கப்பல் மாலுமி, ஒரு கிறிஸ்தவராக இருந்தும், ஜார்ஜ் முல்லர் சொன்னதை அவரால் நம்ப முடியவில்லை. என்றாலும், அவர் அழைத்தபடியினால் வேண்டா வெறுப்போடு ஜெபிக்க முழங்கால்படியிட்டார். ஜார்ஜ் முல்லர் அந்த பனிப் பாறைகள் விலகும்படி ஜெபம் செய்தார்.

அவர் ஜெபித்து முடித்ததும், அந்த மாலுமியும் ஜெபிக்கத் துவங்கினார். உடனே ஜார்ஜ் முல்லர், அவர் ஜெபிப்பதைத் தடுத்து விட்டார். "நீ ஜெபிக்க வேண்டாம். காரணம், என் ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் கொடுத்து விட்டார். இன்னொரு முறை அதே காரியத்திற்கு ஜெபிக்க வேண்டியதில்லை. மேலும், ஆண்டவர் மீது உனக்கு விசுவாசம் இல்லை. ஆகவே, நீ ஜெபித்தும் பிரயோஜனம்

**இல்லை. நீ இப்பொழுது போய் கடலைப் பார், பனிப் பாறைகள் விலகி இருக்கும், கப்பலைச் செலுத்த ஆயத்தப்படு" என்றார்.**

**ஜார்ஜ் முல்லர் சொன்ன வார்த்தைகள், அந்த மாலுமிக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும், அவருடைய விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு, கடலைப் போய் பார்த்தார்.**

**என்ன ஆச்சரியம்! பனிப் பாறைகளெல்லாம் மறைந்து போய் இருந்தன. உடனே கப்பலும் புறப்பட்டது. விசுவாசம், ஜார்ஜ் முல்லரின் விசுவாசம், தேவனிடத்திலிருந்து அற்புதத்தைக் கொண்டு வந்தது. அவசர நேரத்தில் கர்த்தரிடத்திலிருந்து அவருக்கு உதவியைக் கொண்டு வந்தது.**

நீங்களும், உங்கள் தேவைகளுக்காக ஆண்டவரை விசுவாசியுங்கள். "கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" என்று விசுவாசியுங்கள்.

**"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான்சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்." (மாற்கு 11:23,24)**

என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார். சந்தேகப்படாமல் விசுவாசித்தால், நீங்கள் வேண்டிக் கொள்கிற காரியத்தில் அற்புதம் நடக்கும். நீங்கள் அதைக் காண்பீர்கள்.

உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஜெபியுங்கள். "**கர்த்தரிடத்திலிருந்து எனக்கு உதவி வரும், இயேசு கிறிஸ்து என்னை சுகமாக்குவார், ஆண்டவர் என் குடும்பத்தை இரட்சிப்பார், என் கடன் பிரச்சனையைக் கர்த்தர் மாற்றுவார், கர்த்தர் என் தேவைகளைச் சந்திப்பார், ஆண்டவர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்**" என்று உங்கள் விசுவாசத்தை வாயினால் அறிக்கையிடுங்கள்.

உங்கள் விசுவாசத்தின்படியே, ஆண்டவர் உங்களுக்கு அற்புதங்களைச் செய்வதைக் காண்பீர்கள்.

**கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசை வரும்.**

## உதவி செய்யுங்கள்!

ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால், நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

**"உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்." (நீதி. 11:25).**

என்று, கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. அதாவது, எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு கர்த்தரிடத்திலிருந்து உதவி வரும். **நாம் மற்றவர்களுக்கு உதவியாக இருப்பதற்காகத்தான், ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்கிறார்** என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

**"...நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." எபி. 13:16.**

'**தொற்காள்**' ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் வஸ்திரங்கள் கொடுத்து, உதவி செய்து வந்தபடியினால்தான், அவள் மரித்தபோது, ஆண்டவர், பேதுருவைக் கொண்டு அவளை உயிரோடு எழுப்பினார் **(அப். 9:36-40).**

மற்றவர்களைக் குறித்து அக்கறையில்லாத சுயநலவாதிகளுக்கு, ஆண்டவர் எப்படி உதவி செய்ய முடியும்?

**"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." கலா. 6:10.**

அப்பொழுது **கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசை வரும்.**




# 9. பயப்படாதீர்கள், “உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்;” (மல்கியா 4:2)

ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கு, அது இருண்ட காலம்! ரோமர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். “என்ன நடக்குமோ?” என்று பயந்து பயந்து, நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார்கள். சமுதாய வாழ்க்கையில் மட்டுமல்ல, அவர்களது சொந்த, தனிப்பட்ட வாழ்க்கையிலும் இருள் சூழ்ந்திருந்தது.

பாவ இருள் அவர்களது ஆத்துமாவைச் சூழ்ந்திருந்தது. இருளின் சக்தியாகிய பிசாசினால் பாதிக்கப்பட்டு, கலங்கினார்கள். மரணத்தைக் குறித்த நம்பிக்கையற்று, தடுமாறினார்கள்.

இந்தத் தடுமாற்றத்திற்கு மத்தியிலும், கர்த்தர் தன்னுடைய தீர்க்கதரிசியாகிய, ‘**மல்கியா**’வைக் கொண்டு சொல்லியிருந்த;

**“...உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்;” (மல்கியா 4:2)** என்ற வாக்குத்தத்தத்தை மறக்கவில்லை. “நீதியின் சூரியன் உதிப்பார், நம் இருளையெல்லாம் நீக்குவார்” என்ற நம்பிக்கையோடு அவர்கள் காத்திருந்தார்கள்.

அந்த நாளும் வந்தது. நீதியின் சூரியனாய் இயேசு கிறிஸ்து அவதரித்தார். ஜனங்களின் இருளை மாற்றி, ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும்படியாக இயேசு கிறிஸ்து தோன்றினார்.

இந்த நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து அவதரித்த அந்த நாளை, நினைவு கூறும்படியாகத்தான், இன்று உலகமெங்கும் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்படுகிறது. குடித்து, வெறித்து, ஆடம்பரமாக உடுத்தி, உலகச் சிற்றின்பங்களில் ஈடுபடுவதற்கல்ல கிறிஸ்துமஸ் பண்டிகை! இப்படிச் செய்கிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

"என் இருளைப் போக்க, நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து, எனக்காக, ஒரு ஏழையாக, இந்த உலகத்தில் அவதரித்தார்" என்கிற அவரது அன்பை உணர்ந்து, அவரைத் துதித்து மகிழும்படியாக, இன்னும் அவரை அறியாமல், இருளில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு அவரை அறிவிக்கும்படியாகத்தான், பண்டிகை நாட்களை ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து, உங்கள்மேல் உதிக்கும்போது, அவர் கொடுக்கும் ஆசீர்வாதத்தைச் சற்றுத் தியானிப்போம்.

## பாவ இருள் நீங்கும்!

பாவம், ஒரு மனிதனுடைய ஆத்துமாவை இருளடையச் செய்கிறது. பாவ இருள், ஒரு மனிதனுடைய ஆத்துமாவைச் சூழ்ந்து கொள்ளும்போது, அவன் சமாதானத்தை, சந்தோஷத்தை இழந்து தவிக்கிறான்.

பாவ இருளுக்குள் அகப்பட்டு, வெளி வர முடியாமல் தவிக்கிறான். இப்படிப்பட்ட மக்களுக்குப் புது வாழ்வு கொடுக்கும்படியாகவே, நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் மனிதனாய் அவதரித்தார்.

**"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது..." (மத். 4:15).**

ஆம், நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவில் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். பாவ இருள் நீங்கப் பெற்று, புதிய வாழ்வைப் பெற்றார்கள்.

**ஒரு சமயம், 'ஈரோடு' என்ற நகரில், 'இயேசு விடுவிக்கிறார்' நற்செய்திக் கூட்டங்கள் நடைபெற்றது. அநேகர் சுகம் பெற்று, மேடைக்கு வந்து சாட்சி சொல்லி, ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள்.**

**ஒரு வாலிபன், அற்புதமான ஒரு சாட்சியைச் சொன்னான்.**

**ஒரு குறிப்பிட்ட பாவத்திற்குப் பல வருடங்களாக அவன் அடிமைப்பட்டிருந்தான். அதை விட்டுவிட விரும்பியும், அவனால் அதை விட முடியவில்லை. கூட்டத்தில் கண்ணீரோடு மனந்திரும்பினான். தேவனுடைய ஒளி அவனுக்குள் பாய்ந்து வந்தது. அப்பொழுது ஒரு இருளின் சக்தி, அவனை விட்டு வெளியேறிப் போனதை, அவன் உணர்ந்தான்.**

**உடனே பாவத்திலிருந்து அவனுக்கு விடுதலை! ஒரு சந்தோஷம் அவனுடைய உள்ளத்தை நிரப்பினது. "தேவனுடைய வெளிச்சம் எனக்குள் வந்தபோது, ஒரு இருளான உருவம் என்னை விட்டு வெளியேறிப் போனதை என்னால் காண முடிந்தது" என்று அந்த வாலிபன் கூறினான்.**

நீதியின் சூரியனாம் **இயேசு கிறிஸ்து,** உங்கள் வாழ்க்கையிலும் பாவ இருளை மாற்றி, **புதிய ஒரு வாழ்க்கையை உங்களுக்குத் தர முடியும்.**

பாவப் பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு, விட முடியாத பாவக் காரியங்களில் சிக்கி, சமாதானமற்றுக் கலங்குகிறீர்களா?

நீங்கள் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம்; நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவுக்கு உங்கள் உள்ளத்தில் இடம் கொடுங்கள். கிறிஸ்துவாகிய ஒளி, உங்கள் உள்ளத்தில் வரும்போது, பாவ இருள் தானாக உங்களை விட்டு விலகிப் போய் விடும்.

ஜீவ ஒளியாகிய இயேசு கிறிஸ்துவால் அல்லாமல், உங்கள் பாவ இருள் நீங்குவதற்கு வேறு வழியே இல்லை.

## பிசாசாகிய இருள் விலகும்!

இருளின் அதிகாரியாகிய பிசாசானவனால், நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கவே முடியாது. நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து, இந்த உலகத்தில் உலாவின நாட்களில், அவரைக் கண்ட உடனேயே அசுத்த ஆவிகள் விலகி ஓடின.

**"...ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா**

**வந்தீர்?..." (மாற்கு 1:24)** என்று சத்தமிட்டு, கலங்கி ஓட ஆரம்பித்தன. ஒளிக்கு முன்பாக இருளின் சக்திகள் நிற்க முடிவதில்லை.

**என் உறவினர்களில் அநேகர் இந்துக்கள்தான். ஒரு சமயம், என்னுடைய சித்தி ஒருவர், தன் வாழ்க்கையில் நடந்த அற்புதத்தை என்னிடத்தில் சொன்னார்கள்.**

**ஒரு கன நித்திரையின் ஆவி, அவர்களைத் தாக்கி இருந்தது. எப்பொழுதும் அவர்களுடைய சரீரத்தில் ஒரு அசதியும், தூக்கமும் இருந்து கொண்டேயிருந்தது. ஆட்களோடு பேசிக் கொண்டிருக்கும்போதே அவர்களை அறியாமலே அப்படியே தூங்கி விடுவார்கள். கண்களைக் திறக்க முடியாத அளவுக்கு அவர்களுக்குள் தூக்கம் காணப்பட்டது.**

**பல இடங்களுக்குச் சென்று பரிகாரம் தேடியும், அதிலிருந்து அவர்களுக்கு ஒரு விடுதலை கிடைக்கவில்லை. இந்நிலையில், என்னைப் பார்த்துப் பேசி, ஜெபிக்கும்படியாக என்னுடைய ஊழிய அலுவலகத்திற்கு ஒருநாள் வந்தார்கள். துணைக்கு ஒரு சகோதரியை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும்போது, நடந்த ஒரு காரியத்தை அவர்களே என்னிடத்தில் இப்படியாகச் சொன்னார்கள்.**

**"தேவனுடைய வீடு' காம்பௌண்ட்டுக்கு வெளியே காரை நிறுத்தி விட்டு, இறங்கி, காம்பௌண்ட்டுக்குள் கால் வைத்த உடனே, எனக்குள்ளிருந்து ஏதோ ஒன்று வெளியேறிப் போனதை உணர்ந்தேன். என் சரீரம் இலகுவானது. ஏதோ ஒரு ஆவி, என்னை விட்டு வெளியேறிப் போனதை தெளிவாக நான் உணர்ந்தேன். அந்த நேரத்திலிருந்தே, அந்தப் பிரச்சனையே எனக்கு இல்லை" என்றார்கள் மகிழ்ச்சியோடு.**

பாருங்கள்! பிசாசாகிய இருள் அவர்களைத் தாக்கியிருந்தது. கன நித்திரையின் ஆவியினால், அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

'ஜெபிக்க வேண்டும்' என்று, இயேசு கிறிஸ்துவைத் தேடி வந்தார்கள். **'தேவனுடைய வீடு'** காம்பௌண்டிற்குள் வந்தவுடனே, அந்த ஆவி ஓடிப் போனது. காரணம், இயேசு கிறிஸ்துவாகிய ஒளிக்கு முன்பாக, இருளாகிய பிசாசினால் நிற்கவே முடியாது.

**‘தேவனுடைய வீடு’** காம்பௌண்ட்டிற்குள் எப்பொழுதும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறபடியினால், நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம், எப்பொழுதும் அங்கே வியாபித்திருக்கிறது. ஆகவேதான், அந்தப் பிசாசினால் அங்கிருக்க முடியவில்லை.

பிரியமானவர்களே, அசுத்த ஆவிகளினால், மந்திர வல்லமைகளினால் கலங்கி நிற்கிறீர்களா?

இயேசு கிறிஸ்துவாகிய நீதியின் சூரியனுக்கு முன்பாக, எந்த அசுத்த ஆவிகளும், மந்திர தந்திர சக்திகளும், பில்லி-சூனிய மந்திரங்களும் நிற்க முடிவதில்லை.

உங்கள் குடும்பத்தில், தொழிலில், வியாபாரத்தில், நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவுக்கு இடம் கொடுத்து, அவரை விசுவாசித்து, அவரைப் பற்றிக் கொள்ளும்போது, எந்தப் பிசாசின் இருளின் சக்திகளும் உங்களை மேற்கொள்ள முடியாது.

உங்கள் வீட்டில், எப்பொழுதும் நீங்கள் ஜெபித்துக் கொண்டே, ஆண்டவரைத் துதித்துக் கொண்டே இருப்பீர்களானால், இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம், எப்பொழுதும் உங்கள் வீட்டிற்குள் இருக்கும். எந்தப் பிசாசின் வல்லமையும், உங்கள் வீட்டிற்குள் நுழையவே முடியாது.

**“...என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்;...” (மல்கியா 4:2).**

நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கிறது. நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து உங்கள் வீட்டில் இருந்தால், உங்கள் வீட்டிலும் ஆரோக்கியம் இருக்கும்!

## மரண இருள் மாறும்!

மரண இருளின் பள்ளத்தாக்கு, ஒவ்வொரு மனிதனும் கடந்து செல்ல வேண்டிய பாதை. மரணம் நெருங்கும்போது, மனிதனுடைய உள்ளம் நடுங்குகிறது.

காரணம், **மரணத்திற்குப் பிறகு, ஒரு மகிமையான வாழ்க்கை உண்டு** என்பதை அநேகர் அறியவில்லை.

இந்த உலகத்தோடு உங்கள் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. மரணத்திற்குப் பிறகு, ஒரு மகிமையான வாழ்க்கை உண்டு. அதுதான் அழியாத நித்திய வாழ்க்கை! அந்த வாழ்க்கையில் வியாதி இல்லை! வறுமை இல்லை! பசி இல்லை! கண்ணீர் இல்லை!

இந்த ஆசீர்வாதமான, நிலையான வாழ்வைப் பெற்றுக் கொள்ள ஒரே வழி, நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதுதான்!

இயேசு கிறிஸ்து, ஒரு மனிதனுடைய உள்ளத்திற்குள் வரும்போது, அந்த மனிதனுடைய மரண பயத்தை மாற்றி, மரணத்தைக் குறித்த ஒரு நிச்சயத்தை அவனுக்குக் கொடுக்கிறார். ஆகவேதான், இயேசு கிறிஸ்துவை தங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டவர்கள், மரணத்தைக் குறித்துப் பயப்படுவதில்லை.

**முதல் நூற்றாண்டிலே ரோமாபுரியை ஆட்சி செய்த, ‘நீரோ’ என்கிற ஒரு மன்னன், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எழும்பினான். “கிறிஸ்தவத்தை அழித்துவிட வேண்டும்” என்று தீர்மானித்து, கிறிஸ்தவர்களைக் கொடுமைப் படுத்தினான்.**

**ஆயிரக்கணக்கான மக்கள் உட்காரக் கூடிய, ‘கொலேசியம்’ என்கிற அரங்கத்தைக் கட்டி, ஜனங்களுக்கு முன்பாக, பசியுள்ள சிங்கங்கள் மத்தியில் கிறிஸ்தவர்களைப் போட்டான். சிங்கங்கள் அவர்களைக் கடித்துக் குதறுவதைக் கண்டு, ஜனங்கள் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள்.**

**ஆனால், சிங்கங்களுக்கு முன்பாகப் போடப்பட்ட ஒரு கிறிஸ்தவரும் அழுது கொண்டிருக்கவில்லை. தேவனைத் துதித்துக் கொண்டே மரித்தார்கள். யாரும் மரணத்தைக் குறித்துப் பயப்படவேயில்லை. நீரோ மன்னனால், அதை விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.**

**“இந்தக் கிறிஸ்தவர்கள் ஏன் மரணத்தைக் கண்டு பயப்படுவதேயில்லை?” என்று ஆச்சரியப்பட்டான். அவனுடைய அதிகாரிகள், “கிறிஸ்தவர்கள், தாங்கள் மரித்தால் மோட்சத்தில் இயேசு கிறிஸ்துவோடு இருப்போம்” என்று விசுவாசிக்கிறார்கள்.**

**ஆகவேதான், மரணத்தை அவர்கள் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்கிறார்கள்" என்றார்கள்.**

இதுதான் இரகசியம். நீதியின் சூரியன் உங்கள் உள்ளத்தில் உதிக்கும்போது, மரண இருள், உங்கள் உள்ளத்தை விட்டு மாறிப் போகும்.

இந்த ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொடுப்பதற்காகவே, நீதியின் சூரியனாய் இயேசு கிறிஸ்து அவதரித்தார். சிலுவையில் இரத்தம் சிந்தினார்! மரித்து, உயிரோடு எழுந்து, இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த நீதியின் சூரியன் உங்கள் உள்ளத்தில், உங்கள் குடும்பத்தில், உதிக்க ஆயத்தமாயிருக்கிறார். இதற்காக நீங்கள் வேறு எங்கும் போக வேண்டிய அவசியமேயில்லை, எதுவும் செலவு செய்ய வேண்டிய அவசியமும் இல்லை.

விசுவாசத்தோடு உங்கள் உள்ளத்தில் அவருக்கு இடங்கொடுத்தால் போதும். இப்பொழுதே நீதியின் சூரியனாய் இயேசு கிறிஸ்து உங்கள் உள்ளத்தில் வருவார். உங்கள் வாழ்க்கையிலிருக்கிற எல்லா இருளையும் நீக்குவார்.

இந்தப் புத்தகத்திலுள்ள ஒவ்வொரு செய்திகள் மூலமாகவும், தேவனாகிய கர்த்தர் உங்களோடுகூட பேசியிருப்பார் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன்தாமே உங்களோடுகூட இருந்து, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கிற எல்லாப் பயங்களிலிருந்தும், உங்களை விலக்கிப் பாதுகாத்து, உங்களை ஆசீர்வதிப்பாராக!

**"பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!"**
**என்ற இப்புத்தகத்தின் மூலம்**

# நான் பெற்ற ஆசீர்வாதங்கள்!

(கட்டத்தில் ✓ செய்யவும்)

- ☐ இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதன்முதலாக அறிந்து கொண்டேன்.
- ☐ இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டேன்.
- ☐ கவலை நீங்கி ஆறுதலடைந்தேன்.
- ☐ பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டேன்.
- ☐ ------------------------------------------------
  ------------------------------------------------
- ☐ ------------------------------------------------
  ------------------------------------------------

---

எனது முகவரி:

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

------------------------------------------------

**குறிப்பு: தயவு செய்து இந்தப் படிவத்தை நிரப்பி, பின்பக்கம் உங்கள் ஜெபக் குறிப்புகளையும் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.**

# ஜெபக் குறிப்புகள்



# Fear Not,

# I Will Be With you!

Jesus Redeems MINISTRIES

*Nalumavadi - 628 211, Thoothukudi Dt., T.N., India.*

+91- 4639 220000 | +91 - 81110 71000

*For More Details:*

+91 - 94881 75315

prayer@jesusredeems.org

**Web:** www..jesusredeems.org

*Watch our programs:*

jesusredeemsministries

comfortertv.com

mohanclazarus / podcast